367
367

திருக்குறட்சுருக்கம்

விளக்கப் பொழிப்புரை

இரண்டாம் புத்தகம்

(நான்கு ஐந்து உயர்நிலை வகுப்புகளுக்குரியவை.)

தொகுப்பாளர்:

ஆண்டர்சன் உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர்கள்

வித்துவான் P. B. S. இராமாநுஜாசாரியார்.

வித்துவான் R. கன்னியப்ப நாயகர்.

புலவர் K. A. பாலசுப்பிரமணிய முதலியார்.

ரியீட்டாளர்:

யர்நிலைப்பள்ளியினர்

ஞ்சீபுரம். [விலை அணா 4

1948.

O-,1C5
N48
101.224

திருக்குறட் சுருக்கம்

விளக்கப் பொழிப்புரை

இரண்டாம் புத்தகம்

(நான்கு ஐந்து உயர்நிலை வகுப்புகளுக்குரியவை.)

தொகுப்பாளர் :

ஆண்டர்சன் உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர்கள்

வித்துவான் P. B. S. இராமாநுஜாசாரியார்.

வித்துவான் R. கன்னியப்ப நாயகர்.

புலவர் K. A. பாலசுப்பிரமணிய முதலியார்.

வெளியீட்டாளர்:

ஆண்டர்சன் உயர்நிலைப்பள்ளியினர்

பதிப்புரிமை]

காஞ்சீபுரம்.

1948.

[விலை அணா 4

முன்னுரை

தமிழ் மொழிக்குத் தனிச்சிறப்பினை அளிப்பது திருக்குறள். அது தமிழ் மறை எனவும் வழங்கப்பெறும்; ஓதற்கு எளியது; உணர்தற்கு அரியது; கருத்துகளைச் சுருங்கக்கூறி விளங்க வைக்கும் இயல்புடையது. அத்தகைய சிறந்த நூல் திருவள்ளுவர் என்னும் புலவர் பெருமானால் இயற்றப்பெற்றது.

அதனை அனைவரும் கற்றறிதல் இன்றியமையாதது; ஆகையால், கல்வித்துறைத்தலைவர்கள், தமிழ் மாணவ மாணவியரனைவரும் கற்றற்குரிய குறட்பாக்களைத் தொகுத்துச் சுற்றறிக்கை மூலம் வெளியிட்டுள்ளனர். அப்பாக்களைக் கடினசந்திகளைப் பிரித்தும், எளிய நடையில் தெளிவான பொழிப்புரை எழுதியும் பதிப்பித்துள்ளோம். அவ்வப் பாக்கள் அமைந்துள்ள அதிகாரத்தின் தலைப்புகளுக்கும் பொருள் எழுதப்பட்டுள்ளது.

இப்பதிப்பு வெளியாவதற்குப் பல துறைகளிலும் உதவிபுரிந்த எமது பள்ளியின் தலைமை ஆசிரியர், உயர்திரு. A. S. ஜான்ஸன், M.A.,L.T., அவர்களுக்கும், அச்சாகும்போது பிழைதிருத்தம் முதலியனவற்றைச் செய்து கைம்மாறு கருதாமல் பேருதவி புரிந்த ஆசிரியர் வித்துவான். மே. வீ. வேணுகோபாலப்பிள்ளை அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றி உரியதாகுக!

இப்பதிப்பு வெளிவரத் துணைபுரிந்த இறைவன், மேலும் மேலும் இத்தகைய பணியில் எம்மை ஊக்கியருள்வானாக என, அவனடிகளைச் சிந்தித்து வாழ்த்தி வணங்குகின்றோம்.

ஆண்டர்சன்
உயர்நிலைப்பள்ளி,
காஞ்சீபுரம்,
13-2-48.

தொகுப்பாளர்கள்.

மதிப்புரை.

உலகத்திலேயே மிகச் சிறந்த நூல்களுள் ஒன்றாகிய திருக்குறளைத் தமிழ் மாணவர் அனைவரும் நன்கு கற்று அறிவது அவசியம். இதை உணர்ந்த கல்வித்துறைத் தலைவர்கள் முதல் உயர்நிலை வகுப்பி லிருந்து ஐந்தாம் உயர்நிலை வகுப்பு வரையில் உள்ள மாணவர்கள் கற்கவேண்டிய திருக்குறட்பாக்களைத் தொகுத்துச் சுற்றறிக்கை மூலம் தெரிவித்துள்ளனர். எமது பள்ளியிலும் பிற பள்ளிகளிலும் உள்ள மாணவ மாணவியர் இக்குறட்பாக்களை எளிதில் கற்று அறிந்து கொள்ளுமாறு எமது பள்ளியின் தமிழாசிரியர்களாகிய திருவாளர்கள் P. B. S. இராமானுஜாசாரியார், R. கன்னியப்ப நாயகர், K. A. பாலசுப்பிரமணிய முதலியார் ஆகிய இவர்கள் சுயநலத்தையும், ஊதியத்தையும் பொருட்படுத்தாது, இவ்விளக்கப் பொழிப்புரையை அன்பின் செயலாக வெளியிட்டது போற்றத்தக்கதாகும். இது பலருக்கும் பயனளிக்க எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிவானாக!

A. S. ஜான்ஸன்,
Headmaster & Correspondent,
Anderson High School, Conjeeveram.

வித்துவான் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை,
புத்தகப் பதிப்பாசிரியர்,
நாமகள் கழகம், காஞ்சீபுரம்.

இத்திருக்குறட்சுருக்க விளக்கப் பொழிப்புரைப் பதிப்பு, பள்ளியிற்றமிழ் பயிலும் சிறுவர் சிறுமியர்க்குப் பயன்படத் தக்க வகையில் எளிய முறையானியன்ற அதிகாரக் குறிப்பீட்டு விளக்கம், பொழிப்புரை, கருத்துரை ஆகிய உறுப்புகளுடன் விளங்குகின்றது. இதனை நன்கு முயன்று இயற்றிய ஆசிரியர்களையும் வெளியிட்டுதவிய அறிஞரையும் பெரிதும் பாராட்டுகின்றேன்!

மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை.
13-2-48.

திருக்குறட்சுருக்கம்

(பொழிப்புரை)

நான்காம் உயர்நிலை வகுப்பு

கடவுள் வாழ்த்து

1. வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்
தார்க்
கியாண்டும் இடும்பை யில.

(பொழிப்புரை.) (எந்தப்பொருளையும்) விரும்புதலும், வெறுத்தலும் இல்லாத கடவுளின் பாதங்களைச் சேர்ந்தவர்களுக்கு (எக்காலத்தும்) எவ்விடத்தும் பிறவித்துன்பங்கள் இல்லாதனவாகும்.

வான்சிறப்பு

(மழையினது சிறப்பு)

2. விசும்பின் துளிவீழின் அல்லால்மற் றாங்கே
பசும்புல் தலைகாண் பரிது.

(பொ—ரை.) ஆகாயத்திலிருந்து மழைத்துளிகள் வீழ்ந்தால் அல்லாமல், (விழாவிட்டால்) அவ்விடத்துப் பசுமையானபுல்லும் தோன்றுதல் அரிதாகும்.

குறிப்பு:— மற்று—வினைமாற்று.

நீத்தார் பெருமை

(துறவறம் கொண்டாரது பெருமை)

3. இருமை வகைதெரிந் தீண்டறம் பூண்டார்
பெருமை பிறங்கிற் றுலகு.

(பொ—ரை.) (பிறப்பு, வீடு என்னும்) இரண்டின் (இன்பதுன்பக்) கூறுபாடுகளை ஆராய்ந்தறிந்து, (அப்

பிறப்பை ஒழிப்பதற்கு) இப்பிறப்பில் துறவறத்தை மேற் கொண்டவரது பெருமையே இவ்வுலகத்தில் உயர்ந்தது.

அறன்வலியுறுத்தல்

(தருமத்தினது சிறப்பை வற்புறுத்திக் கூறுதல்)

4. சிறப்பீனும்; செல்வமும் ஈனும்; அறத்தினூங்
காக்கம் எவனோ உயிர்க்கு?

(போ-ரை.) (அறம்) வீட்டையும் தரும்; துறக்கம் முதலிய செல்வத்தையும் தரும்; (ஆதலால், மக்கள்) உயிர்க்கு அறத்தைக்காட்டிலும் மிக்க உயர்வு யாது?

குறிப்பு: ஆக்கம்— மேன்மேலும் உயர்தல்.

5. ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும்வாய் எல்லாம் செயல்.

(போ—ரை.) (தத்தமக்கு) இயலும் வகையால் (நல் வினையாகிய) அறச் செயல்களை இடைவிடாமல், அவை அடையுமிடமெல்லாம் (ஆராய்ந்து) செய்க.

குறிப்பு: இயலும் வகை: இல்லறமானால், பொருள் அளவிற்கு ஏற்றபடியும், துறவறமானால் யாக்கைநிலைக்கு ஏற்றபடியும் செய்தல்.

அடையுமிடமாவன: மனம், வாக்கு, காயம்.

இல்வாழ்க்கை

(மனைவியோடு கூடி நடத்தும் வாழ்க்கை)

6. அறத்தாற்றின் இல்வாழ்க்கை யாற்றின் புறத்
போஒய்ப் பெறுவ தெவன்? [தாற்றிற்

(போ—ரை.) (ஒருவன்) இல்வாழ்க்கையைத் தரும மார்க்கத்தில் நடத்துவானானால், அவன் அதற்குப் புறம்பாகிய நெறிகளில் சென்று அடையும் பயன்வேறு யாதுளது?

குறிப்பு: புறம்பாகிய நெறி = வனத்தில் வசித்தல்.

வாழ்க்கைத்துணை நலம்

(இல்லாளது நன்மை)

7. பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மையுண் டாகப் பெறின்?

(போ—ரை.) (இல்லாள்) கற்பு என்னும் கலங்காத நிலைமையை உடையவளானால், (ஒருவன் எய்தும் பொருள்களுள்) அவ்வில்லாளைக் காட்டிலும் மேம்பட்ட பொருள்கள் எவையுள?

குறிப்பு: கற்புடைய பணிவியே அறம், பொருள் இன்பங்களாகிய மூன்றுக்கும் காரணம்.

8. சிறைகாக்கும் காப்பெவன் செய்யும் மகளிர்
நிறைகாக்குங் காப்பே தலை.

(போ—ரை.) (மகளிரை அவர்தம் கணவர்கள்) சிறைப்படுத்திக் காக்குங்காவல் என்ன பயனைச் செய்யும்? அம்மகளிர் கற்பினால் தம்மைக் காத்துக் கொள்ளும் காவலே சிறந்த காவலாகும்.

புதல்வரைப்பெறுதல்

(நன்மக்களைப் பெறுதல்)

9. தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது.

(போ—ரை) தம்மக்கள் தம்மைக்காட்டிலும் அறிவுடையராயிருத்தலானது, பெரிய நிலத்தில் நிலைபெற்று நின்ற மக்கள் உயிர்க்கெல்லாம் இன்பந்தருவதாகும்.

அன்புடைமை

(அன்புடையராயிருத்தல்)

10. அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்;
மறத்திற்கும் அஃதே துணை.

(போ-ரை.) (உண்மையை) அறியாதார், 'அறத்திற்கே அன்பு துணையாவது' என்று சொல்லுவர்; (அதனோடல்லாமல்) மற்றப்பாவச் செயல்களை நீக்குதற்கும் அவ்வன்பே துணையாகும்.

விருந்தோம்பல்

(விருந்தினரை உபசரித்தல்)

11. இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்
[தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு.

(போ—ரை.) (ஒருவர்) வீட்டிலிருந்து (பொருள்களைப்) போற்றிவாழும் செய்கை முழுவதும், விருந்தினரைக் காப்பாற்றி அவர்க்கு உபகாரம் செய்வதன்பொருட்டேயாகும்.

இனியவை கூறல்

(இனியசொற்களைச் சொல்லுதல்)

12. இன்சொலால் ஈரம் அளைஇப் படிறிலவாஞ்
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்.

(போ—ரை.) இன்சொல்லாவது: அன்போடு கலந்து, வஞ்சனையில்லாமல் இருக்கின்ற அறமார்க்கத்தினை உணர்ந்தாரது வாயினிடமாகப் பிறக்கும் சொல்லாம்.

குறிப்பு: (இருவர் மாறுபடச் சொன்ன சொல்லினது) உண்மைப் பொருளைக் கண்டவர் கூறும் மெய்யாகிய சொற்களும் (இன்சொல்லே யாதலால்) அருளோடு பொருந்திக் குற்றமில்லாதனவாகும்.

ஈரம்—அன்பு; அளைஇ—கலந்து; படிறு—குற்றம்.

13. அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை
நாடி இனிய சொலின்.

(பொ—ரை.) (பொருளால் பிறர்க்கு) நன்மைபயக்கும் சொற்களை (மனத்தால்) ஆராய்ந்து, இனிய சொற்களையே ஒருவன் சொல்லுவானாயின், (அவனுக்குப்) பாவங்கள் குறைய, அறம் வளரும்.

செய்ந்நன்றி அறிதல்

(பிறர்செய்த நன்மையை மறவாமை)

14. செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றல் அரிது.

(பொ—ரை.) (நாம் ஒருவனுக்கு முன்பு ஒரு உதவியும் செய்யாமலே அவன்) நமக்குச் செய்த உதவிக்கு மண்ணுலகையும், விண்ணுலகையும் பதிலுதவியாகக் கொடுத்தாலும் ஒப்பாகாது.

குறிப்பு: காரணமில்லாத உதவியாகலின், அது சிறந்தது.

நடுவு நிலைமை

(அறநூல் முறையிலிருந்து தவறாமல் ஒப்பநிற்கும் நிலைமை)

15. கெடுவல் யானென்ப தறிகதன் நெஞ்சம்
நடுவொரீஇ யல்ல செயின்.

(போ-ரை.) (ஒருவன்) தன்னெஞ்சம் நடுவுநிற்றலை (ஓரஞ்சொல்லாதிருத்தலை) ஒழிந்து, ஓரவஞ்சகமான செயல்களைச் செய்ய நினைப்பானாயின், (அந்நினைவை) 'யான் கெடுவேன்!' என்பதற்கு உணரும் உற்பாதமாக அறியக்கடவன்.

அடக்கமுடைமை

(மனம், மொழி, மெய்கள் தீயவழியிற் செல்லாமல் அடங்கி யிருத்தல்)

16. காக்க பொருளா அடக்கத்தை ஆக்கம்
அதனினூங் கில்லை உயிர்க்கு.

(போ-ரை.) (மக்கள்) உயிர்க்கு அடக்கத்தைக் காட்டிலும் மிகுதியான செல்வமில்லை; (ஆதலால்), அவ்வடக்கத்தை உறுதிப்பொருளாய்க் கொண்டு அழியாமல் காக்கக்கடவர்.

17. எல்லார்க்கும் நன்றாம் பணிதல்; அவருள்ளும்
செல்வர்க்கே செல்வந் தகைத்து.

(போ-ரை.) (பெருமிதமில்லாமல்) அடங்குதல் எல்லார்க்கும் ஒப்ப நல்லதே; என்றாலும், அவ்வெல்லாருள்ளும் செல்வமுடையவர்களுக்கே (அவ்வடக்கம் வேறொரு) செல்வமாகும் சிறப்பினையுடையதாகும்.

குறிப்பு: செல்வமுடையார் அடங்குதல் அரிதாகலின் இவ்வாறு கூறப்பட்டது.

பொறையுடைமை

(பொறுக்குந்தன்மை)

18. ஒறுத்தாரை ஒன்றாக வையாரே; வைப்பர்
பொறுத்தாரைப் பொன்போல் பொதிந்து.

(போ-ரை.) (பிறன் தமக்குத் தீங்கு செய்தவழிப் பொறுக்காமல் அவனைத்) தண்டித்தவரை (அறிவுடையார்) ஒரு பொருளாக எண்ணமாட்டார்; (அதனைப்) பொறுத் தாரைப் பொன்னைப்போல மதித்துப் பாராட்டுவர்.

அழுக்காறுமை

(பொறுமை கொள்ளாதிருத்தல்)

19. அழுக்காற்றின் அல்லவை செய்யார் இழுக்
ஏதம் படுபாக் கறிந்து [காற்றின்

(போ-ரை.) தீய ஒழுக்கத்தால் (தமக்கு இம்மையிலும் மறுமையிலும்) துன்பம் வருதலையறிந்து, (அறிவுடையார்) பொறுமைக்குக் காரணமான தருமமல்லாத செயல்களைச் செய்யமாட்டார்.

வெஃகாமை

(பிறர் பொருளைக்கவர விரும்பாமை)

20. அஃகாமை செல்வத்திற் கியாதெனின் வெஃ
வேண்டும் பிறன்கைப் பொருள். [காமை

(போ-ரை.) (சுருங்கும் தன்மைத்தாகிய செல்வத் திற்குச்) சுருங்காமைக்குக் காரணம் யாதென்று ஒருவன் ஆராய்ந்தால், அது மற்றவன் விரும்பும் கைப்பொருளைத் தான் விரும்பாமையேயாகும்.

ஒப்புரவு அறிதல்

(உலகநடையை அறிதல்)

21. ஒப்புரவி னல்வருங் கேடெனின் அஃதொருவ
விற்றுக்கோள் தக்கது உடைத்து. [ன்

(போ-ரை.) (ஒருவன் செய்யும்) உபகாரத்தால் (அவனுக்குப் பொருள்) கேடு வரும் என்பார் இருப்பாராயின், அக்கேடு (அவன்) தன்னை விற்றாயினும் கொள்ளும் தகுதியை உடையதாகும்.

ஈகை

(பிறர்க்குக் கொடுத்தல்)

22. வறியார்க் கொன்றீவதே ஈகை; மற்றெல்லாம்
குறியெதிர்ப்பை நீர துடைத்து.

(போ-ரை.) ஒரு பொருளும் இல்லாதார்க்கு (அவர் வேண்டியது) ஒன்றைக் கொடுப்பதே ஈகையாகும்; அஃது ஒழிந்த கொடைமுழுதும் மீண்டும் அதைப்பெற விரும்பிக் கொடுக்கும் தன்மையை உடையதாகும்.

(குறியெதிர்ப்பை = ஓர் அளவு குறித்துவாங்கி அவ்வாங்கியவாறே திரும்பக் கொடுத்தல்.)

23. இலன் என்னும் எவ்வம் உரையாமை ஈதல்
குலன் உடையான் கண்ணே உள.

(போ-ரை.) யான் வறியன் என்று இரப்பவன் சொல்லும் இழிவைத்தான் பிறரிடத்துச் சொல்லாமையும், அதனைத் தன்னிடத்துச் சொன்னார்க்கு இல்லையென்னாது கொடுத்தலும் ஆகிய இவ்விரண்டும் நற்குடியில் பிறந்தவனிடத்தே இருப்பனவாகும்.

24. அற்றார் அழிபசி தீர்த்தல்; அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி

(போ-ரை.) பொருள் பெற்றவனொருவன் அதைப் பின்னால் தனக்குதவ வைக்குமிடம் தருமஞ்செய்வது; (ஆகலால்,) வறுமை மிகுந்தவரது மிக்க பசியைத் தருமம் நோக்கித் தீர்க்கக்கடவன்.

குறிப்பு: பசிமிக்க காலத்து எல்லா நன்மைகளும் அழியுமாதலால், 'அழிபசி' என்றார்.

புகழ்

25. ஒன்றா உலகத் துயர்ந்த புகழல்லால்
பொன்றாது நிற்பதொன் றில்.

(பொ—ரை.) தனக்கு ஒப்பிலாது ஓங்கிய புகழல்லாமல், உலகத்தில் அழிந்துபோகாமல் நிற்பது வேறொன்றும் இல்லை.

26. வசையென்ப வையத்தார்க் கெல்லாம் இசையென்னும்
எச்சம் பெறாஅ விடின்.

(பொ—ரை.) புகழ் என்னும் எச்சம் பெறவேண்டியிருக்க, அது பெறாமல் போவாரானால், உலகத்தார்க் கெல்லாம் அதுவே பழியென்று நல்லவர் சொல்லுவர்.

குறிப்பு: எச்சம்—ஒருவன் இறந்த பிறகு மிகுதியாக நிற்பது.

புலால் மறுத்தல்
[மாமிசம் உண்ணுதலைத் தவிர்தல்]

27. தன்னூன் பெருக்கற்குத் தான்பிறிது னுண்பான்
எங்ஙனம் ஆளும் அருள்?

(பொ—ரை.) தன் உடம்பைப் பெருக்குவதற்காகத் தான் பிறிது ஓர் உயிரின் உடம்பைத் தின்பவன், எங்ஙனம் அருள்உடையவன் ஆவான்?

குறிப்பு: அருள்—ஓர் உயிரின் துன்பம் கண்டபோது, அதனிடத்து உண்டாகும் இரக்கம்.

தவம்

[விரதங்களை மேற்கோள்ளுதல்]

28. வேண்டிய வேண்டியாங் கெய்தலால் செய்தவம்
ஈண்டு முயலப் படும்.

(போ—ரை.) (முயன்றால் மறுமையில் தான்பெற) வேண்டிய பயன்களை வேண்டியவாறே பெறலாம்; ஆதலால், செய்ய வேண்டியதாகிய தவம் இம்மையில் அறிவுடையாரால் முயன்று செய்யப்படும்.

கூடா ஒழுக்கம்

[தகாத ஒழுக்கம்]

29. மழித்தலும் நீட்டலும் வேண்டா; உலகம்
பழித்த தொழித்து விடின்.

(போ—ரை.) உயர்ந்தோர் தவத்திற்கு ஆகாவென்று கூறிய தவறான ஒழுக்கங்களை விட்டு விட்டால், தவஞ் செய்வார்க்குத்) தலை மயிரை நீக்குதலும் சடையாக்குதலு மாகிய வேடமே வேண்டுவதில்லை.

வாய்மை

[உண்மை பேசுதல்]

30. வாய்மை யெனப்படுவ தியாதெனின்; யா
தீமை யிலாத சொலல். [தொன்றும்

(போ-ரை.) மெய்ம்மை யென்று சிறப்பித்துச் சொல்லப்படுவது யாது? என்று கேட்டால், பிறிதோருயிர்க்குச் சிறிதும்தீங்கு உண்டாகாத சொற்களைச் சொல்லுதலாகும்.

வெகுளாமை

[கோபங் கொள்ளாமை]

31. தன்னைத்தான் காக்கின் சினங்காக்க; காவாக்
தன்னையே கொல்லுஞ் சினம். [கால்

(பொ—ரை.) (ஒருவன்) தன்னையேதான் (துன்பமடையாமல்) காக்க நினைப்பானாயின், தன் மனத்தில் (தோன்றும்) கோபத்தை (வெளிக் காட்டாமல்) காக்கக் கடவன்; அங்ஙனம் காத்துக் கொள்ளாவிடின், அக்கோபம் தன்னையே அழித்து விடும்.

இன்னா செய்யாமை

[துன்பந் தருபவைகளைச் செய்யாதிருத்தல்]

32. நோயெல்லாம் நோய்செய்தார் மேலவாம்;
நோயின்மை வேண்டு பவர். [நோய்செய்யார்

(பொ—ரை.) துன்பந் தருவனவெல்லாம் (பிறிதோர் உயிர்க்குத்) துன்பங்களைச் செய்தவர் மேலனவாகும்; (அதனால்), (தமக்குத்) துன்பந் தருபவைகளை விரும்பாதார் (பிறிதோருயிர்க்குத) துன்பந் தருபவைகளைச் செய்ய மாட்டார்.

குறிப்பு: இந்தச் செய்யுளில் வந்த சொல்லும் பொருளுமே மீண்டும் வருதலால், இது சொற் பொருள் பின்வரும் நிலையணி.

நிலையாமை

33. 'நெருநல் உளன் ஒருவன்; இன்றில்லை!' என்னும்
பெருமை உடைத்திவ் வுலகு.

(போ—ரை.) 'ஒருவன் நேற்று இருந்தான்; (அவனே) இன்று இல்லை யாயினான்,' என்று சொல்லும் (நிலையாமை யாகிய) பெருமையை இவ்வுலகமானது உடையதாகும்.

மெய்யுணர்தல்

[உண்மை அறிதல்]

34. காமம் வெகுளி மயக்கம் இவை மூன்றன்
நாமங் கெடக்கெடும் நோய்.

(போ—ரை.) (ஞான யோகங்களில் முதிர்ச்சி யடைந்தவர்களுக்கு) விழைவு, வெறுப்பு, அவிச்சை என்னும் இக் குற்றங்கள் மூன்றினுடைய பெயருங்கூடக் கெடுமானால், (இவற்றின் காரியமாகிய) வினைப் பயன்கள் உண்டாக மாட்டா.

ஊழ்

[முற்பிறவிப் பயன்]

35. நன்றாங்கால் நல்லவாக் காண்பவர் அன்றாங்
அல்லற் படுவ தெவன்? [கால்

(போ—ரை.) நல்வினையின் பயனாக உண்டாகும் இன்பங்களை ஒழிக்க முயலாமல், "இவை நல்லவை" என்று இசைந்து அவைகளை அனுபவிப்பவர், தீவினையின் பயனாக உண்டாகும் துன்பங்களை (அவ்வாறு அனுபவிக்காமல்) ஒழிக்க முயன்று துன்பப் படுவது எதற்கு?

இறை மாட்சி

[அரசனது சிறப்பு]

36. காட்சிக் கெளியன் கடுஞ் சொல்லன் அல்ல
மீக்கூறும் மன்னன் நிலம். [னேல்

(போ—ரை.) (முறை வேண்டினவர்களும் குறை வேண்டினவர்களும்) பார்ப்பதற்கு எளியவனாய், (யாவரிடத்தும்) கடுஞ்சொல் சொல்லாதவனாய் இருப்பானானால், அம்மன்னனது நிலத்தை உலகத்தார் (எல்லா நிலங்களினும் மேலாக) உயர்த்திக் கூறுவர்.

குறிப்பு: உலகம்—உலகத்திலுள்ள மக்கள் (இட.வாகு பெயர்)

கல்வி

[கற்க வேண்டுபவைகளைக் கற்றல்]

37. எண்என்ப ஏனை யெழுத்தென்ப இவ்விரண்டும்
கண்என்ப வாழும் உயிர்க்கு.

(போ—ரை.) கணிதம் என்று சொல்லப்படுவனவும் மற்ற இலக்கிய இலக்கணம் என்று சொல்லப்படுவனவும் ஆகிய இக்கலைகளிரண்டையும் இவ்வுலகில் வாழும் மக்களுயிர்க்குக் கண்கள் என்று அறிந்தோர் கூறுவர்.

குறிப்பு: எண், எழுத்து- ஆகுபெயர்கள். முதலிரண்டு ‘என்ப’ என்பவைகள் பலவின் பால் வினையால்அணையும் பெயர்கள்; மூன்றாவதாக உள்ள ‘என்ப’ என்பது பலர் பால் எதிர்கால வினைமுற்று.

38. உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்.

(போ—ரை.) (கூடும்போது) மகிழுமாறு ஒன்று கூடி (பிரியும்போது, ‘இவரை எக்காலத்து என்ன காரணத்தால் எவ்விடத்துக் கூடுவோம்!’ என்று) நினையுமாறு பிரிதலாகிய அதனைப் போன்றதே புலவரது தொழிலாகும்.

கல்லாமை

(கற்றற்குரியவைகளைக் கல்லாதிருத்தல்)

39\. கல்லா ஒருவன் தகைமை தலைப்பெய்து
சொல்லாடச் சோர்வு படும்.

(போ—ரை.) (நூல்களைக்) கல்லாத ஒருவனுடைய பெருமையானது (கற்றவர்) அவனைச்சார்ந்து அவனுடன் பேச அழிந்துபோகும்.

40\. விலங்கொடு மக்க ளனையர் இலங்குநூல்
கற்றாரோ டேனை யவர்.

(போ–ரை.) விளங்கிய நூலைக் கற்றாரோடு கல்லாதவர் (நன்மை செய்வதில்) மக்களையும் (தீமைசெய்வதில்) விலங்குகளையும் போன்றவராவர்.

குறிப்பு: கற்றார் மக்களையும், கல்லாதார் விலங்குகளையும் போன்றவராவர் என மாற்றிக் கூறப்பட்டிருப்பதால், இது மயக்க நிரல்நிறை யணி.

கேள்வி

(கேட்கப்படும் நூற்பொருள்களைக் கற்றறிந்தார் கூறக் கேட்பது)

41\. நுணங்கிய கேள்வியர் அல்லார் வணங்கிய
வாயினர் ஆதல் அரிது.

(போ–ரை.) நுட்பமாகிய கேள்வியுடையவர் அல்லாதவர் பணிந்த மொழியினையுடையராதல் அரிதாகும்.
வாய்—ஆகுபெயர்.

அறிவுடைமை
(அறிவுடையராயிருத்தல்)

42. எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்
மெய்ப்பொருள் காண்ப தறிவு. [பொருள்

(போ—ரை.) யாதொருபொருளை எவரெவரால் சொல்லக்கேட்டாலும் அந்தப் பொருளினது உண்மைப்பொருளை ஆராய்ந்தறிவதே அறிவெனப்படும்.

குறிப்பு: யார் யார்—உயர்ந்தார், இழிந்தார், பகைவர், நண்பர், அயலார்.

43. எவ்வ துறைவ துலகம் உலகத்தோ
டவ்வ துறைவ தறிவு.

(போ-ரை.) உலகம் எவ்விதம் ஒழுகுகிறதோ, அவ்விதம் உலகத்தோடு பொருந்தி ஒழுகுவது அரசனுக்கு அறிவாகும்.

குறிப்பு: அரசன் தான் நினைத்தவாறு ஒழுகினால் பழியும் பாவமும் உண்டாகும்.

பெரியாரைத்துணைக்கோடல்

44. தம்மிற் பெரியார் தமரா வொழுகுதல்
வன்மையு ளெல்லாந் தலை.

(போ-ரை.) (அறிவு முதலியவற்றால்) தம்மைக்காட்டிலும் சிறந்தவரைத் தம்மைச் சேர்ந்தவராகும்படி அவர்களிடம் நடந்து கொள்ளுதலானது பலவிதமானவலிமையுள்ளும் மேலான வலிமையாகும்!

45. இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பார் இலானுங் கெடும்.

(போ-ரை.) (தான் தவறு செய்தகாலத்து) இடித்துப் புத்தி கூறுவாரை(த் தனக்குத் துணையாகக்) கொண்டிராத பாதுகாவலற்ற அரசன், (தன்னைப் பகைகொண்டு) கெடுப்பவர் யாரும் இல்லையாயினும் (தானே) கெடுவான்.

தெரிந்து செயல்வகை

(செய்வதை ஆராய்ந்து செய்யும் முறை)

46. ஆக்கங்கருதி முதலிழக்கும் செய்வினை
ஊக்கார் அறிவுடை யார்.

(போ-ரை.) (மேன்மேலும் பெறக்கூடிய) செல்வத்தை எண்ணி, (முன்தாம் பெற்றிருந்த) முதலையும் இழத்தற்கு(க் காரணமாகிய) வினையை அறிவுடையவர்கள் செய்யமாட்டார்கள்.

47. நன்றாற்ற லுள்ளுந் தவறுண் டவரவர்
பண்பறிந் தாற்றாக் கடை.

(போ-ரை.) (அரசன்) அவரவர் குணங்களை ஆராய்ந்து, (அவைகளுக்குப் பொருத்தமான செயல்களைச்) செய்யாவிட்டால் (வேற்றுவேந்தர்களிடத்து) நன்மையான செயல்களைச் செய்தபோதும் குற்றமுண்டாகும்.

குறிப்பு: தான் செய்யும் செயலுக்கு உரியவர் அல்லாதவரிடத்தில், அதனைச் செய்வது தவறு.

வலி அறிதல்

(பலத்தை அறிதல்)

48. நுனிக்கொம்பர் ஏறினார் அஃதிறந் தூக்கின்
உயிர்க்கிறுதி யாகி விடும்.

(போ-ரை.) (ஒரு மரக்)கிளையின் நுனியிடத்தே ஏறி நின்றார் (தம்முயற்சியால்) அவ்வளவினைக்கடந்து மேலும் ஏற முயலுவாராயின், (அம்முயற்சி) அவருயிர்க்கு முடிவாய்விடும்.

குறிப்பு: தன் வலிமைக்குமேற்பட்ட செயலைச் செய்யக் கருதுபவன் தீமை அடைவான்.

இச்செய்யுளில் ஒன்றை விளக்க மற்றொன்றைக் கூறியிருப்பதால் இது பிறிதுமொழிதல் அணியாகும்.

49. ஆகா றளவிட்டி தாயினுங் கேடில்லை
போகா றகலாக் கடை.

(போ-ரை.) பொருள் வருகின்ற வழியின் அளவு சிறியதாயிருந்தாலும், அது செலவாகும் வழியின் அளவு அதிகமாக இல்லாவிடின், (அதனால் அரசர்க்குக்) கேடு இல்லையாகும்.

குறிப்பு : வருவாயும் செலவும் சமமாய் இருந்தாலும் கேடு இல்லையாகும்.

காலமறிதல்

(தமக்கேற்ற காலத்தை அறிதல்)

50. அருவினை யென்ப உளவோ கருவியால்
காலம் அறிந்து செயின்?

(போ-ரை.) (ஏற்ற) கருவிகளுடன் (ஒன்றைச் செய்யவேண்டிய) காலமறிந்து செய்தால், (அரசர்களுக்குச்) செய்வதற்கு முடியாத செயல்கள் என்று சொல்லப் படுபவைகளும் இருக்கின்றனவோ? (இல்லை.)

51. கொக்கொக்க கூம்பும் பருவத்து; மற்றதன்
குத்தொக்க சீர்த்த விடத்து.

(போ-ரை.) (ஒருவன்) தொழிலைநாடிச் செல்லாதிருக்குங் காலத்தில் கொக்கு இருப்பது போல (அமைதியாய்) இருக்கக் கடவன்; தொழிலை நாடிச்செல்லுங்காலத்தில், கொக்கு தப்பாமல் மீனைக்குத்தி இரையாகக் கொள்வதைப்போலத் தப்பாமல் அதனைச்செய்து முடிக்கக்கடவன்.

குறிப்பு: கொக்கு மீனைப் பிடிக்கவேண்டி யிருக்கும் பொழுது மீன் வருமளவும் உயிரில்லாததுபோல அடங்கி யிருத்தல், ஒருவன் ஒரு தொழிலைச் செய்ய அதற்குரியகாலம் வருமளவும் ஒரு தொழிலையும் செய்யாது அடங்கியிருப்பதற்கு உபமானமாகும். இரையாகத்தக்க மீன் வந்த போது கொக்கு அதனைத் தப்பாமல் விரைந்து குத்துதல், ஒரு தொழிலைச் செய்யக்காலம் வாய்த்தபோது அதனைத் தப்பாமல் விரைந்து செய்தலுக்கு உபமானமாகும்.

இடனறிதல்

(வெல்லுதற்கேற்ற நிலத்தினை அறிதல்)

52. அஞ்சாமை யல்லால் துணைவேண்டா எஞ்சாமை
எண்ணி யிடத்தால் செயின்.

(போ-ரை.) (வினைசெய்யும் திறங்களை எல்லாம்) ஒழியாது எண்ணி, அவற்றை யிடத்தொடு பொருந்தச் செய்வராயின், (அச்செயலுக்குத்) தம் வலிமை வேண்டுவதல்லது (பிறிது ஒரு) துணை வேண்டுவதில்லை.

தெரிந்து வினையாடல்

(தெளியப்பட்டவரை அவர்செய்ய வல்லவைகளை அறிந்து) ஆளுந்திறம்)

53. அன்பறிவு தேற்றம் அவாவின்மை இந்நான்கும்
நன்குடையான் கட்டே தெளிவு.

(போ-ரை.) (அரசனிடத்து) அன்பும், (அவனுக்கு வேண்டுபவைகளை அறியும்) அறிவும், (அவற்றைச் செய்யும் பொழுது) கலங்காமையும், (அவற்றால் பொருள் வருமானால், அதன்மேல்) விருப்பு இன்மையுமாகிய இந்நான்கு குணங்களையும் நிலைபெற உடையவனிடத்தில் (தொழிலை விடுவது) தெளிவாகும்.

சுற்றந் தழால்

(கிளைஞரைத் தன்னிடத்திலிருந்து நீங்காமல் அணைத்தல்)

54. பற்றற்ற கண்ணும் பழைமை பாராட்டுதல்
சுற்றத்தார் கண்ணே உள.

(போ—ரை.) (ஒருவன் செல்வந்தொலைந்து) வறியவனாகியபோதும் (அவனைவிடாது அவனோடு) பழைமை கொண்டாடும் இயல்புகள் சுற்றத்தாரிடத்திலே இருக்கின்றன.

குறிப்பு: பழைமையாவது முன்பு தமக்குச்செய்த உபகாரம்.

பொச்சாவாமை

(மறவாமை)

55. அச்சம் உடையார்க்கு அரணில்லை ஆங்கில்லை
பொச்சாப் புடையார்க்கு நன்கு.

(போ-ரை.) (காடு, மலை முதலான அரண்களினுள்ளே இருந்தாலும் மனத்தினிடத்துப்) பயமுள்ளவர்க்கு அவற்றால் யாதொரு பயனுமில்லை; அதுபோலச் (செல்வமெல்லாம் உடையவராயினும் மனத்தின்கண்) மறதியை உடையவர்க்கு அவற்றால் யாதொரு பயனுமில்லை.

செங்கோன்மை

(அரசனால் செய்யப்படும் ஆட்சியினது தன்மை)

56. கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல்
 களைகட் டதனொடு நேர். [பைங்கூழ்

(பொ-ரை.) அரசன் (நல்லவர்களைப் பாதுகாக்கக்) கெட்டவர்களைக் கொலையால் தண்டித்தல் களையைக் களைந்து பசியபயிரைக் காத்தனோடு ஒப்பாகும்.

வெருவந்த செய்யாமை

(அஞ்சத்தக்க செயல்களைச் செய்யாமை)

57. அருஞ்செவ்வி இன்னா முகத்தான் பெருஞ்செல்
 பேஎய்கண் டன்ன துடைத்து. [வம்

(பொ-ரை.) (தன்னைக் காணவேண்டியவரைக்) காணா தவனையும், (கண்டால்) இனிமையான முகத்தோடு இல்லாதவனையும் இருப்பவனது மிகுந்தசெல்வம் பேயால் காணப் பட்டதைப்போன்ற குற்றமுடையதாகும்.

குறிப்பு: அவனதுசெல்வம் தனக்கும் பிறர்க்கும் பயன்படாது என்பது பற்றிப் 'பேஎய்கண் டன்ன துடைத்து' என்றார்.

கண்ணோட்டம்

(தன்னோடு பழகியவர் சொல்லுவதை மறுக்காமை)

58. கண்ணோட்டத் துள்ளது உலகியல் அஃதிலார்
 உண்மை நிலக்குப் பொறை.

(பொ-ரை.) உலகநடை கண்ணோட்டத்தின் இடத்தே நிகழ்வதாகும்; (ஆதலால்) அக்கண்ணோட்டமில்லாதார் இருத்தல் இந்நிலத்திற்குப்பாரமாகும்.

(கண்ணோட்டம்—தாட்சணியம்)

ஊக்கமுடைமை

(மனச்சோர்வு இல்லாமல் தொழில் செய்தல்)

59. உரமொருவற் குள்ள வெறுக்கை யஃதில்லார்
மரமக்க ளாதலே வேறு.

(பொ-ரை.) ஒருவற்கு மிகுந்த அறிவாவது ஊக்கம்; அவ்வூக்கமில்லாதவர் (மக்களாகார்) மரங்களாவர். சாதி மரங்களுக்கும் அம்மக்களாகிய மரங்களுக்கும் வேற்றுமை உருவே அல்லாமல் வேறில்லை.

குறிப்பு : மக்கட்கு உள்ள நல்லறிவும், காரிய முயற்சியும் இல்லாமையால், முயற்சியில்லாதவரை 'மரம்' என்றார்.

ஆள்வினையுடைமை

(இடைவிடாத உண்மைமுயற்சியுடையனாயிருத்தல்)

60. தாளாண்மை யென்னும் தகைமைக்கண் தங்
வேளாண்மை யென்னுஞ் செருக்கு. [கிற்றே

(பொ-ரை.) (எல்லார்க்கும்) உபகாரஞ்செய்தலென்னும் மேம்பாடு, முயற்சியென்று சொல்லப்படுகின்ற உயர்ந்த குணத்தினிடத்தே நிலைபெற்றதாகும்.

61. தெய்வத்தான் ஆகா தெனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்.

(பொ-ரை.) முயன்றவினை விதியினால் கருதியபயனைத் தாராதாயினும், (அது) தன் உடம்பு வருந்திய வருத்தத்தின் அளவேனும் கூலிதரும்.

குறிப்பு: தெய்வத்தையே நோக்கியிராது முயல்க.

அமைச்சு
(அமைச்சனது தன்மை)

62. அறிகொன்று அறியான் எனினும் உறுதி
உழையிருந்தான் கூறல் கடன்.

(பொ-ரை.) (ஓர் அரசன் தனக்கு அறிவுறுத்தியவாது) அறிவை அழித்துத் தானும் அறியாதவனாய் இருந்தாலும், (அக்குற்றத்திற்காகத் தவிர்த்திராமல் அவனுக்கு) உறுதி யாயினவைகளைச் சொல்லுதல் மந்திரிக்குக்கடமையாகும்,

அறி-முதனிலைத் தொழிற் பெயர்.

வினைத் தூய்மை
(அறம், பொருள், இன்பம் பயக்கும் நல்வினைகளைச் செய்தல்)

63. ஈன்றாள் பசிகாண்பா னாயினும் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை.

(பொ.ரை.) (ஒருவன் தன்னைப்) பெற்றதாயின் பசியைப்போக்க வகையில்லாமல் அதனாற்படும் வருத்தத் தைக் கண்டு இரக்கம்கொள்ளும் தன்மையன் ஆனாலும், அதற்காக அறிவுடையார் பழிக்கும் வினைகளைச் செய்யா மலிருக்கக் கடவன்.

குறிப்பு: குடும்பத்திலுள்ளவர்கள் பசியால் வருந் துங்கால் தீயனவாகிய செயல்களைச் செய்தாகிலும் அவர் களைக் காக்கலாமென்று அறநூல் கூறினும், அரசன் தொழிற்குரியவனும் நன்கு மதிக்கப்படுபவனுமாகிய மந்திரிக்கு அது கூடாது என்பது கருத்து.

வினைத் திட்பம்
(வினைசெய்பவனுக்கு வேண்டும் மனத்திறம்)

64. வினைத்திட்பம் என்ப தொருவன் மனத்திட்பம்;
மற்றைய வெல்லாம் பிற.

(போ-ரை.) வினைசெய்தலின் திறம் என்று சொல்லப் படுவது, அதனை முடிப்பவனது மனத்தின் திறமாகும். அஃது ஒழிந்தனவெல்லாம், அதற்குத் திறம் என்று சொல் லப்படமாட்டா.

குறிப்பறிதல்

(ஒருவர் கருதியதை அவர் கூறாமலே அறிதல்)

65. அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம்.

(போ-ரை.) (தன்னை) அடுத்த பொருளின் நிறத்தைத் தானே காட்டும் கண்ணாடியைப்போல, ஒருவன் தன் னெஞ்சத்தில் கொண்டுள்ளவைகளை அவன்முகம் தானே காட்டும்.

படைச் செருக்கு

(படையினது வீரம்)

66. விழுப்புண் படாதநாள் எல்லாம் வழுக்கினுள்
வைக்குந்தன் நாளை யெடுத்து.

(போ-ரை) (ஒரு வீரன்) தன் வாழ்க்கையிற் கழிந்த நாட்களை எண்ணி, (அவற்றுள் போரிற்) சிறந்த புண் படாத நாட்களையெல்லாம் பயன்படாமல் கழிந்த நாட்க ளுள்ளே சேர்ப்பான்.

குறிப்பு: விழுப்புண்—போர்க்களத்தில் வீரன் முகத் திலும் மார்பிலும் பட்ட புண்.

நட்பு

(பிறரோடு தொடர்பு கொண்டு ஒழுகுதல்)

67. நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொ
பண்புடை யாளர் தொடர்பு. [றும்

(பொ-ரை.) நற்குணமுடையவர் (தம்முள் செய்த) நட்புப் பழகுந்தோறும் (அவர்க்கு இன்பஞ்செய்தல்,) நூலின் பொருள் கற்குந்தோறும் (கற்பார்க்கு) இன்ப முண்டாக்குவதைப் போன்றதாகும்.

நட்பு ஆராய்தல்

(நட்பினரை ஆராயுந் திறம்)

68. ஊதியம் என்ப தொருவற்குப் பேதையார்
கேண்மை ஒரீஇ விடல்.

(பொ-ரை.) ஒருவனுக்குச் செல்வம் என்று சொல்லப்படுவது, (தான் கொண்டிருக்கும்) அறிவில்லாதது நட்பையொழித்து, (அவரை) நீங்கியிருத்தலாகும்.

குறிப்பு: நட்பைவிட்டாலும், அவருடன் இருந்தால் தீங்குவருமாதலின், நீங்கியிருக்க வேண்டுமென்பது கருத்து.

பழைமை

(நட்பினரின் குற்றங்களைப் பழைமையானவர் என்னும் காரணத்தால் பொறுத்தல்)

69. பேதைமை யொன்றோ பெருங்கிழமை யென்
றுணர்க
நோதக்க நட்டார் செயின். [றுணர்க

(பொ-ரை.) வெறுக்கத்தக்க செயல்களை நண்பர் செய்வாரானால், (அதற்குக் காரணம்) அறிவின்மையென்றோ அல்லது உரிமை என்றோ கருதுக.

குறிப்பு: 'செயின்' எனவே செய்யமாட்டார் என்பது பெறப்படும்.

சூது

(சூதாடல்)

70. சிறுமை பலசெய்து சீரழிக்குஞ் சூதின்
வறுமை தருவதொன் றில்.

(பொ-ரை.) (தன்னை விரும்பினவர்களுக்கு முன்பு இல்லாத) துன்பங்கள் பலவற்றையும் உண்டாக்கி, (அவர்க்குள்ள) புகழையும் கெடுக்கும் சூதைப்போல வறுமையைக் கொடுக்க வல்லது வேறில்லை.

மானம்

(தன்னிலையினின்று தாழாமையும், தாழ்வு வந்தவிடத்து உயிர்வாழாமையும்)

71. புகழின்றால் புத்தேள்நாட் டுய்யாதால் என்மற்
றிகழ்வார்பின் சென்று நிலை?

(பொ-ரை.) (மானத்தைவிட்டுத் தன்னை) அவமதிப்பார் பின்னே (ஒருவன்) சென்று நிற்கின்ற நிலையானது (இவ்வுலகத்தின்) புகழை உண்டாக்காது; தேவலோகத்துச் செலுத்தாது; (என்றால், அது அவனுக்குச் செய்வது வேறு) யாதுளது?

சான்றாண்மை

(பல குணங்களால் நிறைந்து அவற்றின்படி ஒழுகுந்தன்மை)

72. கொல்லா நலத்தது நோன்மை; பிறர்தீமை
சொல்லா நலத்தது சால்பு.

(பொ-ரை.) தவம் என்பது ஓர் உயிரையும் கொல்லாத அறத்தின் இடத்ததாகும்; (அதுபோலச்) சால்பு (சான்றாண்மை) பிறர் குற்றத்தைச் சொல்லாத குணத்தினிடத்ததாகும்.

குறிப்பு: இதில் உபமான உபமேயங்களைத் தனித் தனியே கூறி 'அதுபோல' என்னும் உவமஉருபு கொடாது விட்டதால், இச்செய்யுள் எடுத்துக்காட்டுவமை யணி.

73. இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்
என்ன பயத்ததோ சால்பு! [கால்

(போ-ரை.) (தமக்குத்) துன்பந்தருவனவற்றைச் செய்தவர்களுக்கும் (சால்புடைமையால்) இனியவற்றைச் செய்யாமல் இருப்பாராயின், அவர் சால்பு என்ன பயனை யுடையதாகும்?

நாணுடைமை

[தமக்குத் தகுதியல்லாத கருமங்களைச் செய்யும்போது வெட்கமுடையராதல்]

74. அணியன்றோ நாணுடைமை சான்றோர்க்கு?
பிணியன்றோ பீடு நடை? [அஃதின்றேல்

(போ-ரை) சான்றோர்க்கு நாணுடைமை ஆபரண மல்லவா? அவ்வாபரணம் இல்லையாயின், (அவர்தம்) பெரு மிதத்தையுடைய நடை (கண்டவர்களுக்கு) நோயல்லவா?

குறிப்பு: நாணுடையரல்லார் பீடுநடை கண்டார்க்கு வருந்தத் தக்கதாம்.

குடிசெயல்வகை

(தான் பிறந்த குடியை உயரச்செய்தலின் திறம்)

75. குற்றம இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்றும் உலகு.

(போ-ரை.) குத்றங்களைச் செய்யாமல், தன்குடியை உயரச்செய்து ஒழுகுபவனை உலகத்தார் தாம் (அவனுக்

குச்) சுற்றமாக வேண்டி(த்தாமே சென்று அவனைச்) சூழ்ந்திருப்பர்.

குறிப்பு: உலகு–இடவாகுபெயர்.

உழவு

(உழவுத்தொழில்)

76. இலமென்று அசைஇ இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும்.

(போ–ரை.) (யாம்) வறியவரென்று கருதிச் சோம்ப லுற்று இருப்பவர்களைக் கண்டால், நிலம் என்று சொல்லப் படும் நன்மை பொருந்திய பெண், தனக்குள்ளே சிரிப் பாள்.

நல்குரவு

(தரித்திரம்)

77. நற்பொருள் நன்குணர்ந்து சொல்லினும் நல்
சொற்பொருள் சோர்வு படும். [கூர்ந்தார்

(போ-ரை.) உண்மையான நூற்பொருளை நன்ருக அறிந்து சொன்னலும், வறுமை யடைந்தவர் சொல்லும் சொல் பிறரால் ஏற்றுக் கொள்ளத் தகாததாகும்.

இரவச்சம்

(இரப்பதற்கு அஞ்சுதல்)

78. இரவுள்ள உள்ளம் உருகும்; கரவுள்ள
உள்ளதூஉம் இன்றிக் கெடும்.

(போ-ரை.) (பொருள் உடையார் முன்னே பொருள் இல்லாதவர் சென்று) யாசித்து நிற்கும் கொடுமையை

நினைக்க, எம்மனம் கரைந்து உருகும்; (இரப்பவருடைய நிலைமையைக் கண்டும்) இல்லை யென்று சொல்பவரின் கொடுமையை நினைக்க, முன் உருகின அளவு இரங்கும் தன்மையும் அழிந்துவிடும்.

கயமை

(கீழ் மக்களின் தன்மை)

79. தேவர் அனையர் கயவர் அவருந்தாம்
மேவன செய்தொழுக லான்.

(போ-ரை.) தேவரைப் போலத் தமக்குக் கட்டளை யிடுவாரின்றிக் கயவரும் தாம் விருப்புமவைகளைச் செய்தலால், தேவரும் கயவரும் ஒரு தன்மையராவர்.

குறிப்பு:-இதில் கயவரைப் புகழ்வதைப் போலப் பழித்திருப்பதால் இச் செய்யுள் வஞ்சப் புகழ்ச்சியணி.

80. அறைபறை யன்னர் கயவர்தாம் கேட்ட
மறை பிறர்க் குய்த்துரைக்க லால்.

(போ—ரை.) தாம் கேட்ட இரகசியங்களை (இடந் தோறும் சென்று) பிறர்க்குச் சொல்லுதலால், கயவர் அறையப்படும் பறையைப் போல்வர்.

குறிப்பு:—பறையானது தன்னிடத்தில் உண்டாகும் ஓசையைப்பிறர் உணரும்படிபடி செய்வதைப் போல, கயவர்தாம் அறிந்த இரகசியங்களை யாவருமறியக் கூறுவர் என்று கூறப்பட்டிருப்பதால், இது தொழிலுவமையணி.

ஐந்தாம் உயர்நிலை வகுப்பு

கடவுள் வாழ்த்து

1. பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார்.

(பொழிப்புரை.) கடவுளுடைய பாதங்களாகிய தெப்பத்தைச் சேர்ந்தவர்கள், பிறவியாகிய பெரிய கடலைக் கடப்பார்கள். அதனைச் சேராதவர்கள், அக்கடலைக் கடக்க முடியாமல், அதனுள் அழுந்துவார்கள்.

வான்சிறப்பு

[மழையின் பெருமை]

2. கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற்
எடுப்பதூஉம் எல்லாம் மழை. [றுங்கே

(பொ—ரை.) உலகத்தில் வாழ்பவர்களை (ப் பெய்யாமலிருந்து) கெடுப்பதும், அவ்வாறு கெட்டவர்களுக்குத் துணையாயிருந்து (பெய்து) முதலில் கெடுத்தது போலவே உயர்த்துவதும் ஆகிய இவையெல்லாம் செய்ய வல்லது மழை.

நீத்தார் பெருமை

[முற்றத் துறந்த முனிவரது பெருமை]

3. உரன்என்னும் தோட்டியான் ஓரைந்துங் காப்
வரன்என்னும் வைப்பிற்கோர் வித்து. [பான்

(பொ—ரை.) அறிவு என்னும் அங்குசத்தால் (பொறிகளாகிய யானைகள்) ஐந்தையும் அடக்கி (அவைதத்தம்

புலன்களின்மேல் செல்லாமல்) தடுப்பவன் (எல்லா உலகங்களிலும்) மேலானதென்று சொல்லப்படுகின்ற மோட்ச உலகத்திற்கு ஒரு விதையாவான்.

(ஐம்பொறிகள்: மெய், வாய், கண், மூக்கு, செவி என்பவை.)

4. நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்.

(பொ—ரை.) (பயன்) நிறைந்த சொல்லையுடைய துறவிகளது பெருமையை இவ்வுலகத்தில் அவர்கள் கட்டளையாகச் சொல்லிய மந்திரங்களே கண்கூடாகக் காட்டிவிடும்.

(பயன் நிறைதல்: அருள் கொண்டு வரங் கொடுத்தாலும், கோபங் கொண்டு சபித்தாலும், அவ்வப் பயன்களைத் தப்பாது தருதல்)

அறன் வலியுறுத்தல்

[தருமத்தை வற்புறுத்திக்கூறுதல்]

5. மனத்துக்கண் மாசிலன் ஆதல்; அனைத்தறன்;
ஆகுல நீர பிற.

(பொ—ரை.) (அறத்தைச் செய்பவன்) தன் மனத்தில் குற்றமில்லாதவனு யிருக்கக்கடவன்; அப்படிப்பட்டதே அறம்; அஃது அல்லாத மற்றைய சொல்லும் வேடமும் ஆடம்பர குணத்தையுடையவனவாம். (அறம் ஆக மாட்டா.)

6. 'அன்றறிவாம்' என்னா தறஞ்செய்க; மற்றது
பொன்றுங்கால் பொன்றாத் துணை.

(போ—ரை.) ('நாம் இப்பொழுது இளையோம்; ஆதலால், இறக்கின்ற) அக்காலத்தில் தருமத்தைப்பற்றி யோசிப்போம்,' என்று எண்ணிக் கொண்டிராமல், தருமத்தை ஒவ்வொரு நாளும் செய்க; அவ்வாறு செய்கின்ற தருமம் இவ் வுடம்பிலிருந்து உயிர் நீங்கிச் செல்லுகிற காலத்தில் அவ்வுயிர்க்கு அழிவில்லாத துணையாகும்.

7. வீழ்நாள் படாஅமை நன்றுற்றின் அஃதொரு
வாழ்நாள் வழியடைக்கும் கல். [வன்

(போ—ரை.) (செய்யாமல் வீணுகக்) கழியும் நாள் உண்டாகாதபடி ஒருவன் அறத்தைச் செய்வானுனல், அச்செயல் அவன் உடம்போடு கூடும் நாள் உண்டாகும் வழியை உண்டாகாமல் அடைக்கும் கல்லாம்.

(அறம் ஒருவனது பிறவியை ஒழிக்கும்.)

இல்வாழ்க்கை

[மனைவியோடு கூடி வாழ்தலின் சிறப்பு]

8. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.

(போ—ரை.) ஒருவனது இல்வாழ்க்கையானது தன் மனைவியிடம் செலுத்தும் அன்பினையும், பிறரோடு பங்கிட்டு உண்ணுதலாகிய அறத்தினையும் உடையதானுல், அங்ஙனம் உடையனுயிருத்தல் அவ்வில்வாழ்க்கைக்குக் குணமும் பயனுமாகும்.

9. அறன்எனப் பட்டதே இல்வாழ்க்கை; அஃதும்
பிறன்பழிப்ப தில்லாயின் நன்று.

(போ—ரை.) (இல்லறம் துறவறம் ஆகிய இரண்டனுள்) நூல்களினுல் அறம் என்று சிறப்பித்துச் சொல்லப்

பட்டது இல்வாழ்க்கையே; அவ்வில் வாழ்க்கையும் பிறனுல் பழிக்கபடுவது இல்லாமலிருந்தால் நல்லதே யாகும்.

(பழிக்கப் படுவதாவது, தகாத ஒழுக்கம்.)

வாழ்க்கைத் துணை நலம்

[மனைவியின் நற்குண நற்செயல்கள்]

10. மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்
எனைமாட்சித் தாயினும் இல். [கை

(போ—ரை.) இல்வாழ்க்கைக்குத் தகுத்த நற்குண நற்செயல்கள் ஒருவனுக்குரிய மனைவியினிடத்தில் இல்லையானுல், அவ்வில்வாழ்க்கையானது (செல்வத்தால்) எவ்வளவு மேன்மையுடையதாயினும், அதனை உடையதாகாது.

11. தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகை
சொற்காத்துச் சோர்விலாள் பெண். [சான்ற

(போ—ரை.) (கற்பில் தவருமல்) தன்னைக் காப்பாற்றிக்கொண்டு, தன்னைக்கொண்ட கணவனையும் (உணவு முதலியவற்ருல்) உபசரித்து (த் தம் இருவரிடத்திலும்) நன்மை மிகுந்த புகழை நீங்காதபடி காப்பாற்றி நற்குண நற்செயல்களிலும் தவறுதல் இல்லாதவளே பெண்ணுவாள்.

அன்புடைமை

[அன்புடையவனுதல்]

12. என்பி லதனை வெயில்போலக் காயுமே
அன்பி லதனை அறம்.

(போ—ரை.) (புழுவினது) எலும்பில்லாத உடம்பை வெயில் காய்ந்து அழித்தல் போல, அன்பு இல்லாத உயிரைத் தருமதேவதை காய்ந்து அழிக்கும்.

13. புறத்துறுப் பெல்லாம் எவன்செய்யும்? யாக்கை
அகத்துறுப் பன்பி லவர்க்கு?

(போ-ரை.) உடம்பினுள்ளே நின்ற (இல்லறத்துக்கு) உறுப்பாகிய அன்பு இல்லாதவர்களுக்கு மற்றைய புறத்தில் உள்ள (இடம், பொருள், ஏவல் செய்பவர் முதலிய) உறுப்புகளெல்லாம் என்ன உதவியைச் செய்யும்?

(வேறொரு பொருள்: மனத்தின்கண் உறுப்பாகிய அன்பில்லாதவர்களுக்கு உடம்பில் உள்ள கண் முதலிய உறுப்புகளெல்லாம் என்ன பயனைச் செய்யும்?)

விருந்தோம்பல்
[விருந்தினரை உபசரித்தல்]

14. செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்
நல்விருந்து வானத் தவர்க்கு. [பான்

(போ-ரை.) (தன்வீட்டிற்கு) வந்த விருந்தினரை உபசரித்து, இனி வரவிருக்கும் விருந்தினரை எதிர்பார்த்து, (தான் அவரோடு உண்ண) இருப்பவன் (மறுபிறப்பில் தேவனாகித்) தேவர்களுக்கு நல்ல விருந்தினன் ஆவான்.

15. வித்தும் இடல்வேண்டும் கொல்லோ விருந்
மிச்சில் மிசைவான் புலம்? [தோம்பி

(போ-ரை.) (முதலில்) விருந்தினரை உபசரித்து (உண்பித்துப்) பின்பு (அவர்கள் உண்டு) மிகுந்ததைத் தான் உண்பவனுடைய விளைநிலத்திற்கு விதையும் இடுதல் வேண்டுமோ? வேண்டா.

(அவன் நிலம் தானே விளையும்.)

இனியவை கூறல்

[இனிய சொற்களைச் சொல்லுதல்]

16. துன்புறூஉம் துவ்வாமை இல்லாகும் யார்மாட்டும்
இன்புறூஉம் இன்சொ லவர்க்கு

(பொ—ரை.) எல்லாரிடத்திலும் இன்பத்தை மிகச் செய்யும் இன்சொல்லையுடையவர்களுக்குத் துன்பத்தை மிகச்செய்யும் வறுமை இல்லையாகும்.

செய்ந்நன்றியறிதல்

[பிறர்செய்த நன்மையை மறவாதிருத்தல்]

17. தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்தெரி வார்.

(பொ—ரை.) (ஒருவன் தமக்குச்) சிறிய உபகாரத்தைச் செய்தானானாலும், (அதனை) பேரளவினதாகக் கருதுவர் (அவ்வாறு கருதுதலின்) பயனை அறிபவர்.

(தினை சிறிய அளவையும், பனை பெரிய அளவையும் குறித்தன.)

18. கொன்றன்ன இன்னா செயினும் அவர்செய்த
ஒன்றுநன் றுள்ளக் கெடும்.

(பொ—ரை.) (தமக்கு முன்பு ஒரு நன்மையைச் செய்தவர் பின்பு) கொலை செய்தாற்போன்ற தீமைகளைச் செய்தாராயினும், அவர் முன்பு செய்த ஒரு நன்மையை நினைக்க (அத்தீமைகள்) இல்லையாகும்.

நடுவு நிலைமை

[யாவரிடத்தும் ஒரே விதமாக நடந்துகொள்ளுதல்]

19. வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவும் தமபோல் செயின்.

(பொ—ரை.) (தமக்கு உரியவையல்லாத) பிறபொருள் களையும் தம் பொருள்களைப்போலக் காத்துச் செய்வாரானால், (அச்செயல்) வாணிகஞ் செய்பவர்களுக்கு நன்றாகிய வாணிகமாம்.

(பிறர் பொருள்களைத் தம் பொருள்போலக் காத்துச் செய்தலாவது, பிறரிடமிருந்து அதிகமான விலையைக் கொள்ளாமையும், வாங்குபவர்க்குக் குறைவான பொருளைக் கொடாமையும் ஆகும்.)

அடக்கமுடைமை

[தீயவழியில் செல்லாமல் அடங்கி நடத்தல்]

20. ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப் புடைத்து.

(பொ—ரை.) (ஒருவன்) ஒரு பிறப்பில் ஆமையைப் போல ஐம்பொறிகளையும் அடக்க வல்லவனானால் (அச்செயல் அவனுக்கு) எழுபிறப்பிலும் துணையாதலையுடையது.

(ஆமை ஐந்தடக்குதலாவது—தன் நான்கு கால்களையும் தலையையும் இடருண்டாகாதபடி தன் ஓட்டிற்குள் அடக்குதல்)

21. யாகாவார் ஆயினும் நாகாக்க; காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.

(பொ—ரை.) (ஒருவர் அடக்க வேண்டுவனவாகிய) எல்லாவற்றையும் அடக்க மாட்டாதவராயினும் நாவொன்றினையாவது அடக்கக் கடவர்; (அதனை) அடக்கமாட்டாராயின் சொற்குற்றத்துள் அகப்பட்டுத் (தாமே) துன்பப் படுவர்.

ஒழுக்கமுடைமை

[நல்லொழுக்கத்தை உடையராதல்]

22. ஒழுக்கம் உடைமை குடிமை; இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்.

(போ—ரை.) (எல்லாருக்கும் தத்தம் வருணத்திற்குப் பொருத்தமான) ஒழுக்கமுடைமையே குலமுடைமையாகும்; அவ்வொழுக்கத்தினின்றும் தவறுதல் இழிந்த வருணமாய் விடும்.

(ஒழுக்கமே உயர் குலம்.)

23. ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை; இழுக்கத்
எய்துவர் எய்தாப் பழி. [தின்

(போ—ரை.) (எல்லாரும்) ஒழுக்கத்தினால் மேம்பாட்டை அடைவர்; (அதிலிருந்து) தவறுதலால் அடைதற்குத் தகாத பழியை அடைவர்.

பிறனில் விழையாமை

[பிறன் மனைவியை விரும்பாமை]

24. பிறன் மனை நோக்காத பேராண்மை சான்
கறன் ஒன்றோ, ஆன்ற ஒழுக்கு. [றோர்க்

(போ—ரை.) பிறன் மனைவியை விரும்பாத பெரிய ஆண்தன்மை (அறிவு) நிறைந்தவர்க்குத் தருமம் மாத்திரமன்றி, நிறைந்த ஒழுக்கமுமாகும்.

பொறையுடைமை

[பிறர் செய்த பிழையைப் பொறுத்தல்]

25. இன்மையுள் இன்மை விருந்துஒரால் வன்மை
வன்மை மடவார்ப் பொறை. [யுள்

(போ—ரை.) (ஒருவனுக்குத்) தரித்திரத்துள் தரித்திரமாவது, விருந்தினரை (ஏற்றுக்கொள்ளாமல்) கைவிடுதல்; (அதுபோல) வல்லமையுள் வல்லமையாவது, அறிவின்மையால் பிழை செய்தவரைப் பொறுத்துக் கொள்ளுதல்.

அழுக்காறுமை

[பொறாமை கொள்ளாதிருத்தல்]

26. அழுக்கா றெனஒரு பாவி திருச்செற்றுத்
தீயுழி உய்த்து விடும்.

(போ—ரை.) பொறாமை என்கிற ஒப்பற்ற பாவியானவன் (இம்மையில்) செல்வத்தைக் கெடுத்து (மறுமையில்) நரகத்தில் செலுத்தி விடுவான்.

(பொறாமைக் குணம், பாவம் செய்தவனாக உருவகம் செய்யப்பட்டது.)

27. அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்
கேடும் நினைக்கப் படும்.

(போ—ரை.) பொறாமையுள்ள மனத்தை யுடையவனது செல்வமும், பொறாமை யில்லாத மனத்தை யுடையவனது வறுமையும் (உண்டாவதற்குக் காரணம் அறிவுடையவரால்) ஆராயப்படும்.

(பொறாமை கொண்டவன் செல்வ மடைதலும், அஃதில்லாதவன் வறுமை யடைதலும் கூடாமையின், அவற்றுக்குக் காரணம் யாது என்பது அறிவுடையவரால் ஆராயப் படும்.)

புறங் கூறாமை

[பிறரைக் காணாதவிடத்திற் பழித்துரையாமை]

28. கண்ணின்று கண்ணறச் சொல்லினுஞ் சொல்லற்க
முன்னின்று பின்நோக்காச் சொல்.

(போ—ரை.) (ஒருவனை அவன்) எதிரே யிருந்து கொண்டு தாட்சணியமில்லாமல் பேசினாலும் (பேசுக;) (அவன்) எதிரே இல்லாமலிருக்கும்போது பின் வருங் குற்றத்தை ஆராயாத (பழிச்)சொல்லைச் சொல்லாதொழிக.

(ஒருவனை எதிரிலே இகழ்ந்தாலும் மறைவாக இகழா திருத்தல் நல்லது.)

பயனில சொல்லாமை

[பிரயோசனமில்லாத சொற்களைச் சொல்லாமை]

29. பயனில்சொல் பாராட்டு வானை மகன்எனல்;
மக்கள் பதடி எனல்.

(போ—ரை.) பயனில்லாத சொற்களைப் பலமுறையும் சொல்லுபவனை மனிதன் என்று சொல்லற்க; மனிதருள் பதர் என்று சொல்லுக.

தீவினையச்சம்

[பாவங்களைச் செய்வதற்குப் பயப்படுதல்]

30. தீயவை தீய பயத்தலால், தீயவை
தீயினும் அஞ்சப் படும்.

(போ—ரை.) பாவச் செயல்கள் (செய்தவனுக்குத் துன்பங்களையே தருதலால், (அப்படிப்பட்ட) பாவச் செயல்கள் (ஒருவனால்) நெருப்பைக்காட்டிலும் அதிகமாக அஞ்சத்தக்கவை.

ஒப்புரவு அறிதல்

[உலக நடையினை அறிந்து நடத்தல்]

31. ஒப்புரவி னால்வரும் கேடெனின், அஃதொரு
விற்றுக்கோள் தக்க துடைத்து. [வன்

(போ-ரை.) உபகாரம் செய்தலினால் (ஒருவனுக்குப் பொருள்) அழிவு உண்டாகுமாயினும், அவ்வழிவு (ஒருவன்) தன்னை விற்றாயினும் கொள்ளும் தன்மையையுடையதாம்.

(உபகாரஞ் செய்தலினால் வருங்கேடு உண்மையில் கேடு அன்று; புகழேயாகும்)

ஈகை

[ஏற்றவர்களுக்கு இல்லையென்னமற் கொடுத்தல்]

32. ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல் தாமுடை
வைத்திழக்கும் வன்க ணவர்? [மை

(போ-ரை.) தாம் பெற்றிருக்கும் பொருளை (ஏற்றவர்களுக்குக் கொடுக்காமல்) வைத்திருந்து (கடைசியில்) இழந்துவிடுகிற அருளில்லாதவர், வறியவர்களுக்கு (வேண்டும் பொருளைக்) கொடுத்து (அவர் மகிழ்தலினால் அருளுடையவர்) அடையும் மகிழ்ச்சியைக் கண்டறியாரோ!

(பொருளை ஈயாது வைத்து இழப்பவர் ஈதலினால் வரும் இன்பத்தை அறியார்.)

33. இரத்தலின் இன்னாது மன்ற நிரப்பிய
தாமே தமியர் உணல்.

(போ-ரை.) பொருளை நிரப்பவேண்டி (வறியவர்க்குக் கொடாமல்) தாமே தனித்து உண்ணுதல் (ஒருவர்க்குப் பிறரிடத்துச் சென்று) யாசித்தலைவிடத் துன்பந்தருவதாகும்.

(நிரப்பிய-'செய்யிய' என்னும் வாய்பாட்டு வினையெச்சம்.)

34. சாதலின் இன்னாத தில்லை; இனிததூஉம்
ஈதல் இயையாக் கடை.

(பொ-ரை.) (ஒருவனுக்குச்) சாதலைப் போலத் துன்பந்தருவது (வேறொன்றும்) இல்லை; அத்தகைய சாதலும் (வறியவர்க்கு ஒன்றைக்) கொடுத்தல் முடியாதபொழுது இன்பந் தருவதேயாகும்.

புகழ்

35. புகழ்பட வாழாதார் தந்நோவார் தம்மை
இகழ்வாரை நோவ தெவன்?

(பொ-ரை.) (தமக்குப்) புகழுண்டாகும்படி வாழ இயலாதவர், (அதுபற்றிப் பிறர் தம்மைப் பழிக்கும் பொழுது, 'இப்பழிப்பு நம் இயலாமையால் வந்தது,' என்று) தம்மையே வெறுத்துக்கொள்ளாமல், தம்மைப் பழிப்பவர்களை வெறுப்பது எக்காரணத்தால்?

அருளுடைமை

[உயிர்களிடத்துக் கருணையுடையராதல்]

36. அல்லல் அருளாள்வார்க் கில்லை; வளிவழங்கு
மல்லல்மா ஞாலம் கரி,

(பொ-ரை.) அருளுடையவர்களுக்கு (இம்மையிலும்) ஒரு துன்பம் உண்டாகாது; (அதற்குக்) காற்று உலவுகின்ற வளப்பமுடைய பெரிய உலகத்தில் வாழ்வாரே சாட்சியாவர்.

தவம்

[விரதங்களைமேற்கொண்டு பிறவுயிர்களைக் காத்தல்]

37. இலர்பலர் ஆகிய காரணம் நோற்பார்
சிலர்;பலர் நோலா தவர்.

(பொ-ரை.) (உலகத்தில் செல்வர் சிலராயிருக்கத்) தரித்திரர் பலராயிருப்பதற்குக் காரணம், தவஞ்செய்வார் சிலரேயாக, தவஞ்செய்யாதார் பலராதலேயாகும்.

(தவஞ்செய்தவர்கள் செல்வர்களும் செய்யாதவர்கள் தரித்திரர்களும் ஆவார்கள்.)

கூடாவொழுக்கம்

[தீயவொழுக்கம்]

38. நெஞ்சில் துறவார் துறந்தார்போல் வஞ்சித்து
வாழ்வாரின் வன்கணார் இல்.

(பொ-ரை.) மனத்தினால் (உலகப்பற்றுகளை) விடாதவராகி, பற்றற்றவரைப்போல (நடித்து உலகத்தாரை) ஏமாற்றி வாழ்பவரைப் போலும் கொடியவர் பிறர் இலர்.

வாய்மை

[மெய்யினது தன்மை]

39. உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்.

(பொ-ரை.) (ஒருவன்) தன் மனத்திற்கேற்பப் பொய் பேசாமல் நடப்பானானால், (அவன்) உலகத்திலுள்ள பெரியவர்கள் மனங்களிலெல்லாம் இருக்கப் பெறுவான்.

(பொய்யாத மனமுடையவனைப் பெரியவர் எப்போதும் நினைப்பர்.)

40. மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு
தானஞ்செய் வாரின் தலை.

(பொ-ரை.) (ஒருவன் தன) மனத்திற்கேற்ப உண்மையைச் சொல்லுவானானால், (அவன்) தவத்தையும் தானத்தையும் ஒருங்கே செய்வாரை விடச் சிறப்புடையவனாவான்.

41. யாமெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்
வாய்மையின் நல்ல பிற. [தொன்றும்

(போ-ரை.) யாம் மெய்ந்நூல்களாகக் கண்ட நூல்களுள் எவ்விதத்தினும் உண்மையைவிட மேற்பட்டவைகளாகச் சொல்லப்பட்ட பிற அறங்கள் இல்லை.

வெகுளாமை

[கோபங் கொள்ளாமை]

42. சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லி இன
ஏமப் புணையைச் சுடும். [மென்னும்

(போ-ரை.) கோபம் என்கின்ற நெருப்பு (தனக்கு இடமானவரை அன்றி அவருக்கு) இனமாகிய நன்மை செய்கிற தெப்பம் போல்வாரையும் சுடும்.

குறிப்பு: சேர்ந்தாரைக் கொல்லி = தான் சேர்ந்தவரைக் கொல்லுந் தொழிலையுடைய நெருப்பு.

உலகத்தில் நெருப்புத்தான் சேர்ந்த விடத்தையே சுடும்: சினமென்னும் நெருப்போ, தான் சேராத இடத்தையும் சுடும்.

ஏமப்புணை = பாதுகாப்பாகும் தெப்பம் போல்வார், அவர், தவஞான வொழுக்கங்களால் மேம்பட்ட பெரியாராய்க் கேட்டார்க்கு நன்மையானவைகளை இனிமையாகச் சொல்லுபவர். அவரைப் புணை என்றது பிறவிக்கடலுள் அழுந்தாமல் கரையேற்றுவிப்பவர் என்பது பற்றி. இச் செய்யுள் ஏகதேசவுருவகஅணி.

43. இணரெரி தோய்வன்ன இன்னா செயினும்
புணரின் வெகுளாமை நன்று.

(போ-ரை.) பல சுடர்களையுடைய பெருநெருப்பு வந்து பற்றினாற்போன்ற துன்பங்களை (ஒருவன்) செய்தானாயினும் (அவனைக்)கோபியாதிருத்தல் கூடுமானால் (அது) நல்லதாகும்.

இன்னா செய்யாமை

[பிறவுயிர்க்குத் துன்பஞ் செய்யாமை]

44. சிறப்பீனுஞ் செல்வம் பெறினும் பிறர்க்கின்னா
செய்யாமை மாசற்றார் கோள்.

(பொ-ரை.) (யோகமாகிய) சிறப்பினால் தரப்படுவன வாகிய (அணிமா முதலிய) செல்வங்களைப் பெறலாமாயி னும் பிறர்க்குத் துன்பந்தருபவைகளைச் செய்யாதிருத்தல் குற்றமற்றாரது கொள்கையாகும்.

45. தன்னுயிர்க் கின்னாமை தானறிவான் என்கொ
மன்னுயிர்க் கின்னா செயல்? [லோ

(பொ-ரை.) பிறர் செய்கின்ற துன்பங்கள்) தன துயிர்க்குத் துன்பந்தருதலை (அனுபவித்து) அறிகின்றவன், நிலைபேறுடைய பிறவுயிர்களுக்குத் தான் துன்பங்களைச் செய்தல் என்ன காரணத்தால்?

நிலையாமை

[உலகில் உள்ள பொருள்களின் நிலையில்லாத தன்மை]

46. அற்கா வியல்பிற்றுச் செல்வம்; அது பெற்றால்
அற்குப வாங்கே செயல்.

(பொ—ரை.) செல்வம் நிலையாத இயல்பினை யுடைய தாகும்; (ஒருவன்) அச் செல்வத்தைப் பெற்றால் (அதனால் செய்தற்குரிய) அறங்களை பெற்றபொழுதே செய்யக் கடவன்.

குறிப்பு: அற்கா = நிலையாத (ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்); அற்குப = நிலைத்தவை, (வினையாலணையும் பெயர்.)

(அறங்கள் வீடு பயத்தலின், அவற்றை 'அற்குப' என்றார்.)

47. உறங்குவது போலுஞ் சாக்கா டுறங்கி
விழிப்பது போலும் பிறப்பு.

(பொ-ரை.) (ஒருவனுக்கு) மரணம் வருதல், தூங்குதலை யொக்கும்; (அதன் பின்பு) பிறப்பு வருதல், தூங்கி விழித்தலை ஒக்கும்.

துறவு

[அகப்பற்றுப் புறப்பற்றுகளை விடுதல்]

48. யாதனின் யாதனி னீங்கியா னோதல்
அதனி னதனி னிலன்.

(பொ-ரை.) (ஒருவன்) எவ்வெப் பொருளிலிருந்து பற்று விட்டானோ, (அவன்) அவ்வப் பொருளினால் துன்பம் அடைதல் இலனாவன்.

குறிப்பு: நீங்குதல் = ஆசையை விடுதல்;

துன்பம்: இம்மையில் அவற்றைத் தேடுதலானும், காத்தலானும், இழத்தலானும் வருவனவும், மறுமையில் பாவத்தால் வருவனவும்.

49. பற்றுக பற்றற்றான் பற்றினை; அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு.

(பொ-ரை.) (எல்லாப் பொருளையும் பற்றி யிருக்கைகையிலேயே அவற்றுள் ஒன்றிலும்) பற்றில்லாத இறைவன் (சொல்லிய) முத்தி நெறியை (இதுவே நல்ல வழியென்று ஒருவன் தன்) மனத்துக் கொள்க; (அநாதியாய் வருகின்ற உடம்பிற்) பற்றினை விடுவதற்கு அம்முத்தி நெறியின்கண் உபாயத்தை மனத்தாற் செய்க.

இறை மாட்சி

[அரசனுடைய பெருமை]

50. முறை செய்து காப்பாற்று மன்னவன் மக்கட்
கிறையென்று வைக்கப் படும்.

(போ—ரை.) (தான்) நீதியைச் செலுத்தி(த் தன் குடிகளைப் பிறர் வருத்தாமல்) காத்தலேயும் செய்கின்ற அரசன், (பிறப்பால் மனிதனே யாயினும், செய்கையால்) பனிதர்க்குக் கடவுளென்று (உயர்த்து) மதிக்கப்படுவான்.

கல்வி

[கற்றற்குரிய நூல்களைக் கற்றல்]

51. தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்.

(போ—ரை.) தாங்கள் இன்பமடைவதற்குக் காரணமாகிய கல்வியைக் கண்டு உலகத்தாரும் இன்பமடைதலால், (அச்சிறப்பைக் கருதி, நூல்களைக்) கற்றறிந்தவர் பின்னும் அக்கல்வியையே விரும்புவர்.

குறிப்பு: தாம் இன்புறுவது: இம்மையில் புகழ், பொருள் முதலியன பெறுதலாலும் மறுமையில் வீட்டை அடைதலாலும் இன்பமடைதல்.

உலகு இன்புறுவது: 'யாம் இக்கற்றாரோடு சேர்ந்து அறியாதன வெல்லாம் அறியப்பெற்றேம்!' என்று எண்ணி இன்பமடைதல்.

இன்புறுவது=இன்பம் அடைதற்கு ஏதுவாகிய கல்வி (ஒன்றன்பால் படர்க்கை வினையாலணையும் பெயர்.)

கல்லாமை

52. கல்லா தவரும் நனிநல்லர் கற்றார்முன்
சொல்லா திருக்கப் பெறின்.

(போ-ரை.) (தம் அறியாமையைத் தாமே அறிந்து) கற்றவர்களுடைய சபையில் (ஒன்றையும்) சொல்லாமல் இருக்கப் பெற்றால், கல்லாதவரும் மிக நல்லவராவர். (கற்றவர் சபையில் கல்லாதவர் பேசாதிருத்தலே நன்று.)

கேள்வி

[நூற்பொருள்களைக் கற்றறிந்தார் கூறக் கேட்டதறில்]

53. செவிக்குண வில்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கு மீயப் படும்.

(போ-ரை.) காதுக்கு உணவாகிய கேட்டல் இல்லாத பொழுது வயிற்றுக்கும் சிறிதளவு உணவு தரப்படும்.

(வயிற்றுக்குரிய உணவைவிடக் காதுக்குரிய உணவாகிய கேட்டலே சிறந்தது.)

54. கற்றில னாயினுங் கேட்க; அஃதொருவற்
கொற்கத்தி னூற்றாந் துணை.

(போ—ரை.) (ஒருவன் நன்மை பயக்கும் நூல்களைத் தான்) கல்லானாயினும், (அவற்றின் பொருள்களைக் கற்றறிந்தார் கூறக்) கேட்கக் கடவன்; அங்ஙனம் கேட்டல் ஒருவனுக்குத் துன்பம் வந்த காலத்துப் பற்றுக் கோடாகும் துணையாம் (ஆதலால்.)

55. செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்
அவியினும் வாழினு மென்?

(போ—ரை.) செவியால் அனுபவிக்கப் படும் (கேள்விச்) சுவையை உணராத வாயால் நுகரப்படும் (உணவுச்) சுவையை (மட்டும்) அறியும் மனிதர்கள் செத்தாலும் வாழ்ந்தாலும் (உலகத்திற்கு அவர் செயலால் வரும் பயன்) யாது?

(பெரியார்களிடம் உறுதிநூற் பொருள்களைக் கேட்டல் இல்லாத மனிதர் இறந்தாலும் வாழ்ந்தாலும் பயனில்லை.)

அறிவுடைமை

56. அறிவற்றங் காக்குங் கருவி; செறுவார்க்கும்
உள்ளழிக்க லாகா அரண்.

(போ—ரை.) அறிவு என்பது (ஒருவர்க்கு) அழிவு வாராமல் காக்கும் கருவியாகும்; (அதுவுமல்லாமல் அது) பகைவர்க்கு அழிக்கமுடியாத காப்பரணும் ஆகும்.

(அறிவு ஆபத்துவாராமல் ஒருவனைக் காப்பாற்றும் படையாகவும் பகைவராலும் அழிக்கமுடியாத கோட்டையாகவும் உருவகம் செய்யப்பட்டது.)

57. எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்
மெய்ப்பொருள் காண்ப தறிவு. [பொருள்

(போ—ரை.) யாதொரு பொருளை எவரெவருடைய வாயிலிருந்து கேட்டாலும், அப்பொருளினது உண்மையான பயனைக் காணவல்லதே அறிவாகும்.

குறிப்பு: மனிதருடைய குணங்கள் அடிக்கடி மாறுவனவாதலால், உயர்ந்தபொருளை இழிந்தவர்களிடத்திலும், இழிந்த பொருளை உயர்ந்தவர்களிடத்திலும், நன்மையான பொருளைப் பகைவர்களிடத்திலும், கெடுதலான பொருளை

நண்பர்களிடத்திலும் ஒவ்வொரு சமயம் கேட்கக் கூடு மாதலால், எந்தப் பொருளை யார்யார் சொன்னாலும், சொன்னவருடைய தன்மையைப் பாராமல், சொல்லப் பட்ட பொருளின் உண்மைப் பயனை ஆராய்ந்து கொள்ளு தல் வேண்டும்.

குற்றங் கடிதல்

[குற்றங்களை அருவறுத்து நீக்குதல்]

58. பற்றுள்ள மென்னு மிவறன்மை யெற்றுள்ளும்
எண்ணப் படுவதொன் றன்று.

(போ—ரை.) (பொருளை விட்டுக் கொடுக்க வேண்டு மிடத்தில் விட்டுக்கொடாமல்) பற்றுதல் கொள்ளுகின்ற உள்ளமாகிய உலோபத்தன்மை, எல்லாக் குற்றங்களுள் ளும் வைத்து எண்ணப்படுகின்ற (சாதாரண) குற்றமன்று. (அவற்றைவிட மிகப் பெரியது.)

(உலோபத் தன்மையே குற்றங்களுள் பெரிய குற்ற மாகும்.)

இவறன்மை = உலோப குணம்.

சிற்றினம் சேராமை

[அற்பர் கூட்டத்தைச் சேராதிருத்தல்]

59, மனந்தூய்மை செய்வினை தூய்மை யிரண்டும்
இனந்தூய்மை தூவா வரும்.

(போ—ரை.) (ஒருவனுக்கு) மனம் தூயதாகும் தன்மையும், செய்கிற காரியம் தூயதாகும் தன்மையும் (ஆகிய) இரண்டும், (அவனது) இனம் தூயதாகும் தன்மை பற்றுக்கோடாக உண்டாகும்.

(மனப் பரிசுத்தமும் செய்கைப் பரிசுத்தமும் சேர்க்கையினால் ஒருவனுக்கு உண்டாகும்.)
தூ = பற்றுக்கோடு, தூவா = பற்றுக்கோடாக.

60. மனநல மன்னுயிர்க் காக்கம்; இனநலம்
எல்லாப் புகழுந் தரும்.

(பொ—ரை.) நிலைபெற்ற (மக்கள்) உயிர்க்கு மனத்தினது நன்மை செல்வத்தைக் கொடுக்கும்; இனத்தினது நன்மை எல்லாப் புகழையும் கொடுக்கும்.
(இனநலம் = நல்லாரது சேர்க்கை.)

தெரிந்து செயல் வகை

[செய்யும் காரியங்களை ஆராய்ந்து செய்யும் திறமை]

61. செய்தக்க அல்ல செயக்கெடும்; செய்தக்க
செய்யாமை யானுங் கெடும்.

(பொ—ரை.) (ஒருவன்) செய்யத்தக்கன அல்லாத செயல்களைச் செய்தலால் கெடுவான்; செய்யத்தக்க செயல்களைச் செய்யாமையாலும் கெடுவான்.
(செய்யத்தக்கன வற்றைச் செய்து, தகாதனவற்றைச் செய்யாமல் ஒழிக என்பதாம்.)

வலியறிதல்

[அரசன் தன் வன்மையையும் பகைவரது வன்மையையும் அறிதல்]

62. பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின்.

(பொ—ரை.) மயிலிறகை ஏற்றிய வண்டியும், அப்பொருளை (அது சுமக்குமளவின்றி) மிகவும் அதிகமாக ஏற்றினால் அச்சு முறியும்.

குறிப்பு: மயிலிறகு மிகவும் இலேசானதாயினும், அதனை அளவுக்கு மிஞ்சி ஏற்றினால் வலியவண்டியும் அச்சுமுறியும் என்றதனால், பகைவர்கள் மிகவும் அற்பமானவர்களாயினும் பலர் ஒன்று சேர்ந்தபோது மிக வலியனாகிய அரசனும் தோற்றுவிடுவான் என்பது பொருள்.

இங்ஙனம் உவமானத்தை மட்டும் கூறி உவமேயத்தைப் பெறவைத்தல் 'பிறிது மொழிதல்அணி' எனப்படும்.

63. அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும்.

(பொ—ரை.) (தனக்குள்ள பொருளின்) அளவை அறிந்து (அதற்கேற்பச் சிக்கனமாக) வாழமாட்டாதவனுடைய வாழ்க்கைக் கூறுபாடுகள், உள்ளனபோல(த் தோன்றி உண்மையில்) இல்லாதனவாய்(ப் பின்பு) அத் தோற்றமும் இல்லாமல் அழிந்துவிடும்.

காலமறிதல்

(காரியஞ்செய்வதற்கு ஏற்ற காலத்தினை அறிதல்]

64. ஞாலங் கருதினுங் கைகூடுங் காலங்
கருதி யிடத்தாற் செயின்.

(பொ-ரை.) (ஒருவன் தொழில் செய்வதற்கேற்ற) காலத்தை யறிந்து (அதற்கேற்ற) இடத்தோடு பொருந்தச் செய்வானானால் பூமி முழுவதையும் (தானே ஆளக்) கருதினாலும் (அது அவனுக்குக்) கைகூடுவதாகும்.

இடனறிதல்

[தொழில் செய்தற்கேற்ற இடத்தினை அறிதல்]

65. கடலோடா கால்வல் நெடுந்தேர்; கடலோடும்
நாவாயு மோடா நிலத்து.

(போ-ரை.) (நிலத்தின்கண் ஓடுகின்ற) சக்கரங்களால் வன்மையான பெரிய தேர்கள், கடலின்கண் ஓடமாட்டா; கடலின்கண் ஓடுகின்ற கப்பல்களும், நிலத்தின்கண் ஓடமாட்டா.

குறிப்பு: பகைமேற்செல்லுகின்ற அரசர் இடமறிந்து செல்லாவிடத்துத் தோற்பர் என்பது தோன்றநிற்றலின் இது 'பிறிதுமொழிதலணி'

தெரிந்து தெளிதல்

[அரசன், அமைச்சர் முதலாயினாரை ஆராய்ந்து அறிதல்]

66. காதன்மை கந்தா வறிவறிவார்த் தேறுதல்
பேதைமை யெல்லாந்தரும்.

(போ—ரை.) அன்புடைமை பற்றுக்கோடாக அறிய வேண்டுவனவற்றை அறியாதாரை (அரசன்) தெளிதல், (அவனுக்கு) எல்லா அறியாமைகளையும் கொடுக்கும்.

அறிவில்லாத ஒருவரிடத்துக் கொண்ட அன்புபற்றி அரசன் அவரைத் தொழில் செய்ய ஏவுதல் அறியாமை என்பதாம்.

கந்து=பற்றுக்கோடு.

67. தேரான் தெளிவுந் தெளிந்தான்கண் ஐயுறவுந்
தீரா விடும்பை தரும்.

(போ—ரை.) (அரசன் ஒருவனை) ஆராயாமல் தெளிதலும் ஆராய்ந்து தெளிந்து கொள்ளப்பட்டவனிடத்துச் சந்தேகங் கொள்ளுதலும் (அவனுக்கு) நீங்காத துன்பத்தைக் கொடுக்கும்.

தெரிந்து வினையாடல்

[அரசன் தெளிந்து கொள்ளப்பட்டவரை அவர்கள் செய்ய வல்ல தொழிலையறிந்து அவற்றின்கண் ஆளுந்திறமை]

68. செய்வானை நாடி வினைநாடிக் காலத்தோ
டெய்த் வுணர்ந்து செயல்.

(போ—ரை.) (முதலில், தொழில்) செய்பவனது தன்மையை ஆராய்ந்து, (பின்பு) செய்யப்படும் தொழிலின் தன்மையை ஆராய்ந்து, (பின்பு அவனையும் அத்தொழிலையும்) காலத்தோடு பொருந்த அறிந்து, (அவனை அத்தொழிலில் ஏவுதலைச்) செய்யக்கடவன்.

(காலத்தோடு பொருந்த அறிதலாவது, இத்தொழிலை இத்தன்மையையுடையவன் இன்ன காலத்தில் முடிப்பான் என்பதை ஆராய்ந்து அறிதல்.)

செங்கோன்மை

[நீதியான அரசாட்சி]

69. வானோக்கி வாழு முலகெல்லாம்; மன்னவன்
கோனோக்கி வாழுங் குடி.

(போ-ரை.) உலகத்து உயிர்களெல்லாம் மழையை எதிர்பார்த்து வாழும்; (ஆயினும்) குடிகள் அரசனது செம்மையான ஆட்சியை எதிர்பார்த்து வாழ்வார்கள்.

(மழையினால் ஆகிய உணவு கிட்டப் பெறினும் அரசனுடைய காவல் இல்லாவிடத்துக் குடிகட்கு அதனாற் பயனில்லை என்பது கருத்து.)

70. இறைகாக்கும் வையக மெல்லாம்; அவனை
முறைகாக்கும் முட்டாச் செயின்.

(போ-ரை.) உலகம் முழுவதையும் அரசன் காப்பாற்றுவான்; அவ்வரசனை (அவனது) செங்கோலே காப்பாற்றும் (அவன் அதனை) முட்டுப்படாமற் செலுத்துவானானல்.

கொடுங்கோன்மை

[அநீதியான அரசாட்சி]

71. வேலொடு நின்றான் இடுவென் றதுபோலும்
கோலொடு நின்றான் இரவு.

(பொ-ரை.) தண்டித்தலாகிய தொழிலோடு நின்ற அரசன் (குடிகளைப்) பொருள் வேண்டுதல், (வழிபறிக்குமிடத்தில்) வேலோடு (தனியே) நின்ற கள்வன் (வழிப்போக்கனை வழிமறித்து 'உன் கைப்பொருள்களைத்)கீழே வை' என்று கட்டளையிடுதலை யொக்கும்.

(கொடுங்கோலரசன் குடிகளை வருத்திப் பொருள் கேட்பது, வழிபறிக்குங் கள்வன் வழிப்போக்கனை வருத்திப் பொருள்கேட்பதைப் போல்வதாகும்.)

வெருவந்த செய்யாமை

[அரசன் குடிகள் அஞ்சத்தக்க செயல்களைச் செய்யாதிருத்தல்]

72. கடிதோச்சி மெல்ல எறிக நெடிதாக்கம்
நீங்காமை வேண்டு பவர்.

(பொ-ரை.) செல்வம் நீண்டகாலம் (தம்மைவிட்டு) நீங்காமல் நிற்றலை விரும்புபவர், (குற்றஞ் செய்தாரைத் தண்டிக்கத் தொடங்குங்கால்) அளவுகடந்து செய்பவர் போலத்தொடங்கி (தண்டிக்குங்கால்) அளவு கடவாமற் செய்யக் கடவர்.

கண்ணோட்டம்

[தாட்சணியம்]

73. கருமஞ் சிதையாமற் கண்ணோட வல்லார்க்
குரிமை யுடைத்திவ் வுலகு.

(போ-ரை.) (அரசாட்சி செய்தலாகிய) தம்தொழில் அழியாமல் தாட்சணியப்படவல்ல அரசர்க்கு, இவ்வுலகம் உரியதாந் தன்மையை உடையது.

ஒற்றாடல்

[ஒற்றரை ஆளுதல்]

74. வினைசெய்வார் தஞ்சுற்றம் வேண்டாதா ரென்
றனைவரையு மாராய்வ தொற்று. [றாங்கு

(போ-ரை.) தம்முடைய காரியஞ்செய்வார், சுற்றத்தார், பகைவர் என்று சொல்லப்பட்ட அனைவரையும் (சொற்செயல்களால்) ஆராய்பவனே ஒற்றனுவான்.

(ஆங்கு—அசை நிலை)

ஊக்கமுடைமை

[தொழில் செய்தற்கண் மனக்கிளர்ச்சியுடையராதல்]

75. ஆக்க மிழந்தேமென் றல்லாவா ரூக்கம்
ஒருவந்தங் கைத்துடை யார்.

(போ-ரை.) நிலைபெற்ற ஊக்கத்தைக் கைப்பொருளாக வுடையவர், (பொருளை இழந்தாராயினும்) 'கைப்பொருளை இழந்தோம்!' என்று மனங்கலங்கார்.

(ஒருவந்தம் = நிலைபேறு; கைத்து = கையகத்துள்ள பொருள்.)

ஆள்வினையுடைமை

[முயற்சியுடைமை]

76. பொறியின்மை யார்க்கும் பழியன் றறிவறிந்
தாள்வினை யின்மை பழி.

(போ—ரை.) (பயனைத் தருவதாகிய) விதியில்லாமை ஒருவர்க்கும் பழிப்பாகாது; அறிய வேண்டுவனவற்றை அறிந்து தொழில் செய்யாதிருத்தலே பழிப்பாகும்.

(பொறி = விதி)

இடுக்கண் அழியாமை

[துன்பத்தால் மனங் தளராமை]

77. இடும்பைக் கிடுப்பை படுப்பர் இடும்பைக்
கிடும்பை படாஅ தவர்.

(பொ—ரை.) (ஒரு காரியத்தைச் செய்யும்போது அதற்கு இடையூருக வரும்) துன்பத்திற்கு வருந்தாதவர், அத் துன்பத்துக்குத் (தாம்) துன்பத்தை உண்டாக்குவர்.

('இடும்பை' என்னுஞ் சொல் ஒரே பொருளில் மீண்டும்மீண்டும் வந்துள்ளதால், இச் செய்யுள் 'சொற் பொருட் பின் வருநிலையணி'.)

78. இன்பம் விழையா னிடும்பை யியல்பென்பான்
துன்ப முறுத லிலன்.

(பொ—ரை.) இன்பமானவைகளை விரும்பாதவனுய், (ஊழ்வினையால்) துன்பமடைதல் இயல்பென்று தெளிந்திருப்பவன் (தன் முயற்சியால்) துன்பம் அடையான்.

சொல் வன்மை

[பேச்சு வல்லமை]

79. ஆக்கமுங் கேடு மதனல் வருதலால்
காத்தோம்பல் சொல்லின்கட் சோர்வு.

(பொ-ரை.) (செல்வப்) பெருக்கும் அழிவும் (தப்) சொல்லினல் வருமாதலால், (அத் தன்மைத் தாய) சொல்லினிடத்துத் தவறுதலை (மாந்தர் தம்மிடத்து உண்டாகாமற்) காக்கக் கடவர்.

வினைத் தூய்மை

[செய்யப்படும் தொழில்கள் நல்லனவாதல்]

80. பழிமலைந் தெய்திய வாக்கத்திற் சான்றோர்
கழிநல் குரவே தலை.

(போ—ரை.) (இழிந்தோர் தீய வினைகளைச் செய்து அதனால்) பழியைத் தம்மேற்கொண்டு பெற்ற செல்வத்தை விட (அப் பழியை மேற்கொள்ளாத) சான்றோர் அனுபவிக்கும் மிக்க வறுமையே உயர்ந்தது.

வினைத்திட்பம்

[தொழில் செய்பவனது மனவுறுதி]

81. துன்ப முறவரினுஞ் செய்க துணிவாற்றி
இன்பம் பயக்கும் வினை.

(போ—ரை.) (ஒருவர் முதலில் உடலுழைப்பால் தமக்குத்) துன்பம் மிக வந்தாலும் (அது கண்டு தளராயல்) இன்பத்தைக் கொடுக்கக் கூடிய தொழிலை (மன) வலிமையுடையராய்ச் செய்க.

(துணிவு = கலங்காமை, வன்மை.)

82. எனைத்திட்ப மெய்தியக் கண்ணும் வினைத்திட்பம்
வேண்டாரை வேண்டா துலகு.

(போ-ரை.) தொழில் வன்மையை (இது நமக்குச் சிறந்ததென்று) மேற் கொள்ளாதவரை (அவர் அஃதொழிந்த) வன்மைகளை யெல்லாம் உடையரான விடத்திலும் உயர்ந்தார் நன்கு மதியார்.

(உலகு = உயர்ந்தார், இடவாகு பெயர்.)

அவையஞ்சாமை

[சபைக்குப் பயப்படாதிருத்தல்]

83. பகையகத்துச் சாவா ரெளியர்; அரியர்
அவையகத் தஞ்சா தவர்.

(போ—ரை.) பகைவர் நடுவில் (அஞ்சாமற் புகுந்து) இறக்க வல்லவர் உலகத்துப் பலராவர்; சபையில் அஞ்சாமற் (சென்று பேச) வல்லவர் சிலரே.

நாடு

84. பிணியின்மை செல்வம் விளைவின்ப மேமம்
அணியென்ப நாட்டிற்கிவ் வைந்து.

(போ—ரை.) நோயின்மையும், செல்வமும், பயிர் விளைவும், இன்பமும், காவலும் ஆகிய இவ்வைந்தினையும் ஒரு நாட்டிற்கு அழகென்று (கற்றறிந்தார்) சொல்லுவர்.

படைச்செருக்கு
[படையினது வீரமிகுதி]

85. பேராண்மை யென்ப தறுகணொன் றுற்றக்கால்
ஊராண்மை மற்றத னெஃகு.

(போ-ரை.) (பகைவரிடத்துத் தாட்சணிய மில்லாமல் செய்யும்) வீரச் செயலை மிக்க ஆண்தன்மை என்று சொல்லுவர்; (அப் பகைவர்க்கு) ஒரு தாழ்வு வந்ததாயின் (அதைத் தீர்த்தற்பொருட்டுத் தாட்சணியங் கொண்டு) உபகாரஞ் செய்தலை அவ்வாண் தன்மைக்குக் கூர்மை என்று சொல்லுவர் அறிவுடையார்.

(ஊராண்மை = உபகாரியாந்தன்மை; மற்று = அசை.)

86. புரந்தார்கண் ணீர்மல்கச் சாகிற்பின் சாக்கா
டிரந்துகோள் தக்க துடைத்து.

(போ-ரை.) (தமக்குச் செய்த நன்மைகளை நினைத்து) ஆண்ட அரசரது கண்களில் நீர் பெருகும்படி (போரிலே ஒரு வீரன்) சாகப் பெற்றால், அத்தகைய சாவு யாசித்தாயினும் கொள்ளுந் தன்மையை உடையதாகும்.

நட்பு

87. புணர்ச்சி பழகுதல் வேண்டா; உணர்ச்சிதான்
நட்பாங் கிழமை தரும்.

(போ—ரை.) (ஒருவரோடொருவர் நட்பாதற்குப்) புணர்ச்சியும் பழகுதலும் (ஆகிய காரணங்கள்) வேண்டுவதில்லை; (இருவர்க்கும் ஒத்த) உணர்ச்சியே நட்பாகிய உரிமையைக் கொடுக்கும்.

(புணர்ச்சி = ஓரிடத்தில் சேர்ந்திருத்தல்; பழகுதல் = பலமுறை கண்டு பேசி உறவாடுதல்.)

நட்பாராய்தல்

[நண்பரை ஆராய்ந்தறிதல்]

88. அழச்சொல்லி யல்ல திடித்து வழக்கறிய
வல்லார்நட் பாய்ந்து கொளல்.

(போ-ரை.) (தாம் உலகநடை) அல்லாததை(ச் செய்ய நினைத்தால்) அழும்படியாகச் சொல்லி (விலக்கி, செய்துவிட்டால் மறுபடியும் செய்யாதபடி) நெருக்கி அவ்வுலக நடையைச் (செய்யாவிடத்துச்) செய்விக்க வல்லவரை ஆராய்ந்து நட்புக் கொள்ளக் கடவர்.

(அல்லது = உலகநடை அல்லாதது; வழக்கு = உலகநடை. 'அல்லது அழச் சொல்லி, இடித்து, வழக்கு அறிய வல்லார் ஆய்ந்து நட்புக் கொளல்,' என்பது அந்வயம். 'வல்லார்' என்றதன் பின் இரண்டனுருபு தொக்கது.)

கூடாநட்பு

[தகாத சிநேகம்]

89. சொல்வணக்க மொன்னார்கண் கொள்ளற்க
வில்வணக்கந் தீங்கு குறித்தமை யான்.

(போ-ரை.) வில்லினது வணக்கம் (ஏற்றவர்க்குத்) தீமை செய்தலைக் குறித்தமையால், பகைவர்களிடத்தில் (தோன்றும்) சொல்லினது வணக்கத்தையும் (தமக்கு நன்மை செய்தற்குத் தோன்றியதென்று) கொள்ளாது ஒழிக.

(பகைவரது பேச்சில் உள்ள வணக்கத்தை நம்பலாகாது.)

புல்லறிவாண்மை

[அற்ப அறிவினையுடையராதல்]

90 ஏவவும் செய்கலான் தான்தேறான் அவ்வுயிர்
போஒ மளவுமோர் நோய்.

(போ-ரை.) (புல்லறிவாளன், தனக்கு நன்மையான வைகளை அறிவுடையார்) சொல்லவும் செய்யான்; தானாகவும் (செய்யத் தக்கவற்றை) அறியான்; அந்த உயிரானது (உடம்பை விட்டு) நீங்கும் வரையில் (பூமிக்குப் பொறுத்தற்கரிய) ஒரு நோயாகும்.

(நன்மையாயினவற்றை அறிவுடையார் சொல்லியுங் கேளாமல் தானாகவும் அறியாமல் இருக்கும் புல்லறிவாளன் பூமிக்குப் பாரமாவான்.)

உட்பகை

[நண்பன்போன்று பகைவனாயிருத்தல்]

91. வாள்போல் பகைவரை அஞ்சற்க; அஞ்சுக
கேள்போல் பகைவர் தொடர்பு.

(போ—ரை.) வாள்போல (வெட்டுவோமென்று வெளிப்பட்டு நிற்கும்) பகைவர்களை அஞ்சாதிருக்கக் கடவர்; உறவினர் போல (நடித்து மறைந்து நிற்கும்) பகைவர்களது நட்பை அஞ்சக்கடவர்.

பெரியாரைப் பிழையாமை

[பெரியார்களை அவமதியாமலிருத்தல்]

92. வகைமாண்ட வாழ்க்கையும் வான்பொருளும்
தகைமாண்ட தக்கார் செறின்? [என்னும்

(பொ—ரை.) (சாப அருள்கட்குக் காரணமாகிய) பெருமையால் மாட்சிமைப்பட்ட அருந்தவர் (அரசனைக்) கோபிப்பாராயின், (அமைச்சு, நாடு முதலிய) உறுப்புகளால்) அழகு பெற்ற (அவன்) அரசாட்சியும், (ஈட்டி வைத்த) பெருஞ்செல்வமும் என்ன ஆய்விடும்?

(பெரியார் வெகுள்வாராயின், அரசனுடைய ஆட்சியும் செல்வமும் அழியும்.

'துறவிக்கு வேந்தன் துரும்பு'.)

வரைவில் மகளிர்

[வேசியர்]

93. இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும்
திருநீக்கப் பட்டார் தொடர்பு.

(பொ—ரை.) வேறுபட்ட மனத்தினையுடைய மகளிரும், கள்ளும், சூதும் (ஆகிய இம்மூன்றும்) திருமகளால் கைவிடப்பட்டார்க்கு நட்புகளாம்.

(இருமனம் = ஒருவரை விரும்புதலும் விரும்பாமையும் ஒரு காலத்தேயுடைய மனம்.)

கள்ளுண்ணாமை

94. துஞ்சினார் செத்தாரின் வேறல்லர் எஞ்ஞான்றும்
நஞ்சுண்பார் கள்ளுண் பவர். [றும்

(பொ—ரை.) தூங்கினவர் இறந்தவரினும் (வேறாயினும் அக்காலத்தில் அறிவின்மையால்) வேறெனப்படார்:

(அப்படியே,) கள்ளுண்பவர் (நஞ்சுண்பவரினும் வேறுபட்டவராயினும்) எப்பொழுதும் (அறிவின்மையால் வேறு எனப்படார்); நஞ்சுண்பவரேயாவர்.

மானம்

[எப்பொழுதும் தம் நிலைமையிலிருந்து தாழாமை]

95. பெருக்கத்து வேண்டும் பணிதல்; சிறிய
சுருக்கத்து வேண்டு முயர்வு.

(போ-ரை.) (நற்குடியிற்பிறந்தார்க்கு) நிறைந்த செல்வம் உண்டான பொழுது (யாவரிடத்தும்) பணிவு வேண்டும்; குறைந்த தரித்திரம் உண்டானபொழுது பணியாமை வேண்டும்.

(பணியாமை—தாழ்வு வாராமல் பழைய உயர்ச்சியிலேயே நிற்றல்.)

பெருமை

[பெரியாரது தன்மை]

96. அற்றம் மறைக்கும் பெருமை; சிறுமைதான்
குற்றமே கூறி விடும்.

(போ-ரை.) பெருமையுடையவர் (பிறரது மானத்தையே பேசி) அவமானத்தை மறைப்பர்; சிறுமையுடையவர் (பிறரது குணத்தை மறைத்துக்) குற்றத்தையே பேசி விடுவர்.

சான்றாண்மை

[நற்குணங்கள் நிறைந்த தன்மை]

97. கடனென்ப நல்லவை யெல்லாம் கடனறிந்து
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு.

(போ—ரை.) (நமக்கு இது) தகுவது என்றறிந்து, நற்குண நற்செயல்களால்) நிறைந்து அவற்றை ஆளுந் தன்மையை மேற்கொள்ளுவார்க்கு நல்ல குணங்களெல்

லாம் இயல்பாகவேயிருக்கும் என்று சொல்லுவர் (அறிஞர்.)

பண்புடைமை

[எல்லாரியல்புகளையும் அறிந்து நடத்தல்]

98. அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்
மக்கட்பண் பில்லா தவர். [வர்

(பொ-ரை.) நன்மக்கட்கேயுரிய பண்பில்லாதவர் அரத்தைப்போலும் கூர்மையான அறிவுடையவராயினும், மரத்துக்குச் சமமாவர்.

குடி செயல் வகை

[தான் பிறந்த குடியை உயரச்செய்தல்]

99. நல்லாண்மை யென்ப தொருவற்குத் தான்
இல்லாண்மை யாக்கிக் கொளல். [பிறந்த

(பொ-ரை.) ஒருவனுக்கு நல்ல ஆண்மையென்று சிறப்பித்துச் சொல்லப்படுவது, தான் பிறந்த குடியை ஆளுந்தன்மையை(த்தனக்கு)உண்டாக்கிக்கொள்ளுதலாம்.

உழவு

[உழுதலாகிய தொழில்]

100, உழவினார் கைம்மடங்கின் இல்லை விழைவ
விட்டேமென் பார்க்கு நிலை. [தூஉம்

(பொ—ரை.) உழுதலையுடையவர் கை (அதனைச் செய்யாமல்) மடங்குமாயின், (யாவரும்) விரும்பும் உணவையும் துறந்தோமென்பார்க்கு (அவ்வறத்தின்கண்) நிலை நிற்றலும் இல்லையாகும்.

ஸ்ரீ ஸுதர்சன பிரஸ், கஞ்சி Q.H.ct. 36 C. 1000. 10-2-48.

2-IA
15-23

ஸ்ரீ சுதர்ஸன
பிரஸ், காஞ்சி,
Q. H. ct. 36
C. 1000.
13-2-48.